பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 சித்திரை 05 திங்கட்கிழமை (18.04.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :143

# லண்டனிலிருந்து திரும்பியவுடன் ஜனாதிபதி

# கூட்டணிக் கட்சிகளுடன் தனித்தனியே பேச்சு

## பொதுக் கட்டமைப்பு விடயத்தில் இறுதி முடிவு எட்டுவதற்காக

கொழும்பு, ஏப்ரல்18

**ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணப் பணிகளுக்கான பொதுக்கட்டமைப்பு ஒன்றை புலிகளுடன் சேர்ந்து ஏற்படுத்துவது தொடர்பாக லண்டனில் இருந்து திரும்பியதும் ஜே.வி.பி.உட்பட அரசின் பங்காளிக்கட்சிகளுடன் தனித்தனியே ஜனாதிபதி பேச்சு நடத்துவார் என்று தெரியவருகிறது.**

பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவதில் தொடரும் தாமதங்கள் காரணமாக வெளிநாடுகளின் உதவி நிதி கிடைப்பது தாமதமாகிவருகின்றது. அத்துடன், பொதுக்கட்டமைப்பை விரைவில் ஏற்படுத்துமாறு சர்வதேச சமூகமும் கடும் அழுத்தங்களைக் கொடுத்து வருகின்றது.

இதனால் நெருக்கடிக்கு உள்ளாகிவரும் ஜனாதிபதி பொதுக் கட்டமைப்பு விடயத்தில் விரைவில் ஒரு முடிவுக்கு வருவதற்கு விரும்புகின்றார்.

இதுதொடர்பாக முதலில் ஆளுங்கட்சிக்குள் இணக்கத்தை ஏற்படுத்துவது அவசியம் என்று அவர் கருதுகிறார். இதனால், அரசின் பங்காளிக் கட்சிகளுடன் பேச்சு நடத்த ஜனாதிபதி தீர்மானித்துள்ளார். இவ்வாறு ஜனாதிபதியின் ஆலோ

(12ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே அதிகாரிகள் யாழ். வருகின்றனர்

இலங்கைக்கான நோர்வேத் தூதரகத்தின் அதிகாரிகள் குழு இன்று யாழ். குடாநாட்டிற்கு பயணம் மேற்கொள்ள உள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

நோர்வே நாட்டு நிதியுடன் யாழ். குடாநாட்டில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து ஆராய்வதற்காகவே இக்குழுவினர் யாழ். குடாநாட்டுக்கு வருகின்றனர் என்றும் -

நோர்வேத் தூதரகத்தின் முக்கிய ஆலோசகர் தலைமையில் யாழ். வரும் இக்குழுவினர் நோர்வே அரசினால் யாழ். குடாநாட்டில் முன்னெடுக்கப்படும் அவிருத்தித் திட்டங்கள் குறித்த குறை நிறைகளைக் கேட்டறியும் பொருட்டு பல்வேறு உயர் அதிகாரிகளையும் சந்திக்கவுள்ளனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

## சொல்ஹெய்ம் நேற்று புத்தளத்துக்கு விஜயம்

### வடக்கு முஸ்லிம்களைச் சந்தித்தார்



கொழும்பு, ஏப்.18

தடைப்பட்டுப் போயுள்ள சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிக்கின்றபோது வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் அனைத்து பிரச்சினைகளையும் புலிகளினதும் இலங்கை அரசினதும் கவனத்திற்குக் கொண்டு வந்து அவர்களுக்கு உரிய தீர்வைப் பெற்றுக் கொடுப்பதில் நோர்வே அரசு அர்ப்பணிப்புடன் செயற்படும்.

- இவ்வாறு கூறியுள்ளார் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம்.


நேற்றுக்காலை இலங்கை வந்து சேர்ந்த நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், உடனேயே புத்தளம் சென்றார். அங்கு நுரைச்சோலை மற்றும் ஆழங்குடா ஆகிய பகுதிகளில் அகதிமுகாம்களில் வசித்து வரும், வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களைச் சந்தித்து அவர்களின் குறை நிறைகளைக் கேட்டறிந்தார். அவர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புத்தளம் முகைதீன் ஜும்மா பள்ளிவாசலில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திலும் அவர் கலந்துகொண்டார்.

அங்கு அவர் உரையாற்றுகையில் கூறியதாவது:-

வடக்கு-கிழக்கில் பொதுக்கட்டமைப்பை மிக விரைவில் ஏற்படுத்தக்கூடிய சாதகநிலைகள் தென்படுகின்றன. எனினும் இப்போது இப்பணியானது கரடுமுரடு நிறைந்ததாகவுள்ளது. இவற்றுக்கு மத்தியில் பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தி, அதில் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்வோம்.

(12ஆம் பக்கம் பார்க்க)



*குடாநாட்டின் பாரம்பரிய விளையாட்டான மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் நீர்வேலி சவாரித் திடலில் நேற்று இடம்பெற்றது.*

*சக்தி ரீ.வி. மற்றும் சக்தி எவ்.எம். நிறுவனத்தினர் நடத்திய இப்போட்டியின் விறுவிறுப்பான காட்சியொன்றைப் படத்தில் காணலாம். (படம் : பிரபா)*

## நினைவுக் கல் திரைநீக்கம்

1999ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதி தமிழீழக் கடற்பரப்பில் நடந்த படகு விபத்தொன்றின்போது வீரச்சாவடைந்த கடற்புலி கப்டன் தமிழிசை தெய்வேந்திரன் தேவசுஜிதா என்ற போராளியின் நினைவுக் கல் இன்று விசுவமடு மாவீரர் துயிலும் இல்லத்தில் திரைநீக்கம் செய்துவைக்கப்படவுள்ளது.

முன்னதாக இவரின் திருவுருவப் படம் தற்காலிக இடமான இராமநாதபுரத்தில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு இன்று பிற்பகல் 2.30 மணிக்கு வட்டக்கச்சி மாவீரர் மண்டபத்தில் வீரவணக்க நிகழ்வு நடைபெறவுள்ளது.

## தவராஜா கொலை விசாரணை குற்றப் புலனாய்வுத் துறையிடம்

மட்டக்களப்பு.ஏப்.18

அம்பாறை மாவட்டம் திருக்கோயில் பிரதேச செயலர் ஏ.கே.தவராஜாவின் கொலை தொடர்பான விசாரணைகளை நேற்று முதல் இலங்கை புலனாய்வுத் துறையினர் பொலீஸாரிடமிருந்து பொறுப்பேற்றுள்ளனர்.

இதனையடுத்து கொழும்பிலிருந்து குற்றப் புலனாய்வுத் துறையின் குழுவொன்று தற்போது திருக்கோயிலுக்கு விரைந்துள்ளது.

இதேவேளை, கிழக்கு மாகாணத்திலும் வெலிகந்தைப் பிரதேசத்திலும் தொடரும் கொலைச் சம்பவங்களையடுத்து அப்பிரதேசங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக பொலீஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (ஒ)

## இந்தியாவிலிருந்து இலங்கை திரும்பிய அகதிகள் உட்பட 14பேர் கடலில் கைது!

மன்னார், ஏப்.18

இந்தியாவில் இருந்து இலங்கையை நோக்கி வந்துகொண்டிருந்த 14 பேர் தலைமன்னார் கடற்பரப்பில் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்ட இவர்களை தலைமன்னார் பொலீஸார் சனிக்கிழமை மன்னார் மாவட்டப் பதில் நீதிவான் எம்.ஐ.பாரூக் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

இவர்களில் 8பேர் இந்தியாவில் தஞ்சம் புகுந்திருந்த இலங்கை அகதிகளாவர். இவர்கள் வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள். இவர்கள் 8பேரையும் சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்குமாறு நீதிவான் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

எஞ்சிய 6 பேரில் 2 பேர் இந்தியப் படகோட்டிகளாவர். மேலும் 2 பேர் கொழும்பைச் சேர்ந்த தமிழர்களாவர். இவர்கள் தொழில் ரீதியாக அடிக்கடி இந்தியா சென்றுவருபவர்களென விசாரணையில் தெரியவந்துள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சிறையிலிருந்த இளைஞர் விடுதலை

கொழும்பு.ஏப்.18

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞரை மேல் நீதி மன்றம் விடுவித்துள்ளது. யாழ்ப்பாணம், மணற்காடு. குடத்தனைப் பகுதியைச் சேர்ந்த ஜோன் மரியசீலன் என்பவரே விடுவிக்கப்பட்டவராவார்.

அவர்மீது சுமத்தப்பட்டிருந்த குற்றங்களை நிரூபிக்கப் போதுமான ஆதாரமில்லை எனத் தெரிவித்தே அவர் விடுவிக்கப்பட்டார். ஜெயசீலனை கொட்டாஞ்சேனைப் பொலீஸார் 2001 ஆம் ஆண்டு பெப்ரவரி 7ஆம் திகதி கைது செய்தனர். அப்போது அவர் ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்தார். கைதாகும் போது அவர் வசம் தற்கொலை அங்கியும், கைக்குண்டு ஒன்றும் இருந்தன எனத் தெரிவித்து பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் அவர் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். விடுதலை செய்யப்பட்ட ஜெயசீலன் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி இன்று நாடு திரும்புகின்றார்

தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு லண்டன் சென்றிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இன்று நாடு திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகின்றது:

இதேவேளை - சித்திரைப் புத்தாண்டு விடுமுறைக்காக நுவரெலியா சென்றிருந்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும், தியத்தலாவைக்குச் சென்றிருந்த எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் இன்று கொழும்பு திரும்பவுள்ளனர்.

## ஜனாதிபதி - ரணில் விரைவில் சந்திப்பர்

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையில் வெகுவிரைவில் சந்திப்பொன்று நடைபெறவுள்ளது என ஜனாதிபதி மாளிகை வட்டாரங்கள் கூறின.

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண மற்றும் மீள்கட்டுமானப் பணிகளுக்காக விடுதலைப் புலிகள் இயக்கத்தினருடன் செய்து கொள்ளவுள்ள பொதுக் கட்டமைப்பு விடயம் குறித்து பிரதான எதிர்க்கட்சியுடன் பேச்சுக்களை நடத்துமாறு ஜனாதிபதியின் ஆலோசகர்கள் ஜனாதிபதியிடம் வலியுறுத்தியிருக்கின்றனர் எனத் தெரியவருகின்றது.

இதற்கமைய இம்மாத இறுதிக்குள் இந்தச் சந்திப்பு இடம்பெறலாமெனத் தெரிவிக்கப்படுகிறது. (க)

# இலங்கையின் தூதர் நியமனத்தை கனேடிய அரசு நிராகரித்தது

கொழும்பு,ஏப்.18

பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளரும் ஜனாதிபதியின் பாதுகாப்புத்துறை ஆலோசகருமான சந்திரானந்த டி சில்வாவை கனடா நாட்டுக்கான தூதராக இலங்கை நியமித்ததை கனடா நாட்டு அரசு நிராகரித்துள்ளது. இது இலங்கை அரசுக்கு அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

தமது நாட்டின் குடிவரவு, குடியகல்வுச் சட்ட திட்டங்களுக்கமைய சந்திரானந்த டி சில்வாவின் நியமனத்தை ஏற்கமுடியாதென்று கனேடிய அரசு தெரிவித்துள்ளது.

அவர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகப் பதவிவகித்த காலத்தில் இடம்பெற்ற படையினரின் மனித உரிமை மீறல்கள் தொடர்பான பல குற்றச்சாட்டுக்களுக்கு சந்திரானந்த டி சில்வாவே பொறுப்பு என நிரூபிக்கப்படாவிட்டாலும் - குற்றச்சாட்டுக்கள் இருப்பதே இதற்கான காரணமென்றும் கனேடிய வெளிவிவகார அமைச்சு இலங்கையின் வெளிவிவகார அமைச்சிற்கு அறிவித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கனேடியத் தமிழர்கள் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பினரின் அழுத்தங்களால் கனேடிய அரசு இவ்வாறான தீர்மானத்தை எடுத்திருக்கலாமென நம்பப்படுகின்றது.

இந்த விடயம் குறித்து விடுமுறையில் லண்டனில் தங்கியிருக்கும் ஜனாதிபதி சந்திரிகாவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் -

அவர் நாடு திரும்பியவுடன் இது விடயத்தில் இறுதித் தீர்மானமொன்று எடுக்கப்படுமென்றும் பெயர் குறிப்பிட விரும்பாத உயர்மட்ட அமைச்சரொருவர் நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

கனடாவின் நிராகரிப்புக் குறித்து நேற்றுக் கருத்துத் தெரிவித்த பிரதிவெளிவிவகார அமைச்சர் விஸ்வ வர்ணபால, "கனேடிய அரசின் இந்த முடிவு இலங்கைக்கு வியப்பைத் தந்திருக்கின்றது" - என்று கூறினார். இவ்வாரம் இது குறித்து விரிவாக ஆராயப்படுமென்றும் அவர் கூறினார்.

இலங்கை அரசின் இதேபோன்ற நியமனமொன்றை 1980ஆம் ஆண்டும் கனேடிய அரசு நிராகரித்திருந்தது. முன்னாள் இராணுவத் தளபதி திஸ்ஸ வீரதுங்கவிற்கு அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன வழங்கிய தூதுவர் நியமனத்தையே கனேடிய அரசு நிராகரித்தது. ஆனாலும் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தன தமது முடிவை மாற்றிகொள்ளாத காரணத்தினால் சில மாதங்களுக்குப் பின்னர் கனேடிய அரசு தனது முடிவை மாற்றி, குறிப்பிட்ட நியமனத்தை ஏற்றுக்கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

(க)

## வித்துடல் விதைப்பு

நேற்றுமுன்தினம் சுகவீனம் காரணமாக வீரச்சாவைத் தழுவிக்கொண்ட விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி வீரவேங்கை இயற்கதிர் (விஜயகுமார் விஜிந்தன், உரும்பிராய்), என்ற மாவீரரின் வித்துடல் விதைப்பு நேற்று இடம்பெற்றது.

நேற்று மாலை 5.30 மணியளவில் அவரது வித்துடல் யோகபுரம், உரும்பிராயில் அமைந்துள்ள அண்ணா சனசமூக நிலையத்தில் மக்கள் வணக்கத்திற்காக வைக்கப்பட்டது. அங்கு கோப்பாய் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை இணைப்பாளர் பிரதாப் தலைமையில் வீர வணக்கக் கூட்டம் நடைபெற்றது. முதலில் மாவீரரது பெற்றோர் ஈகச்சுடர் ஏற்றி மலரஞ்சலி செலுத்தினர். வீரவணக்க உரையை யாழ். மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி நிகழ்த்தினார். தொடர்ந்து மாவீரரது வித்துடல் அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் பவனியாக எடுத்துவரப்பட்டு கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் இரவு 7.30 மணியளவில் விதைகுழியில் விதைக்கப்பட்டது. இந்நிகழ்வில் போராளிகளும் பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

(ஒ)

## சிப்பாய்க்கு விளக்கமறியல்

தென்மராட்சி,ஏப்.18

தென்மராட்சி நுணாவிலில் அமைந்துள்ள 7ஆவது சிங்க றெஜிமென்ட் படை முகாமில் நேற்றுமுன்தினம் மேஜர்தர அதிகாரி உட்பட மூவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்ட சிப்பாயை எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி சாவகச்சேரி நீதிவான் பா.சுப்பிரமணியம் உத்தரவிட்டுள்ளார்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக கே.பி.எஸ்.விஜயகுமார என்ற அச்சிபபாய் நேற்று நீதிவானின் இல்லத்தில் வைத்து நீதிவான் முன்பாக ஆஜர்செய்யப்பட்டார்.

அப்போது அவரை எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

(ஒ-3)

## பிரதேச செயலரின் கொலைக்கு தேசவிரோத சக்திகளே காரணம்

### விடுதலைப் புலிகள் கண்டனம்

மட்டக்களப்பு,ஏப்.18

அம்பாறை மாவட்டம் திருக்கோயில் பிரதேச செயலாளர் ஏ.கே.தவராஜாவின் படுகொலையை தமிழீழ விடுதலைப் புலிகள் கண்டித்துள்ளனர்.

இதுகுறித்து மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

38 வயதுடைய திருக்கோயில் பிரதேச செயலாளரான ஏ.கே.தவராசா இனந்தெரியாத துப்பாக்கிதாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

புத்திஜீவிகளைக் கொல்வதன் மூலம் தமிழ்த்தேசியத்தைப் பலவீனப்படுத்தலாம் என நினைக்கும் தேசவிரோத சக்திகளே இக்கொலையைப் புரிந்துள்ளனர்.

அப்பிரதேசத்தில் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு தனது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்துக்கு மோட்டார் சைக்கிளில் திரும்பிக்கொண்டிருக்கையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் விசேட அதிரடிப் படையினரின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்ட பிரதேசம் எனக் கருதப்படும் திருக்கோயிலில் மோட்டார் சைக்கிளில் சென்ற இருவரால் இவர் சுடப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்துடன் இருவர் தொடர்புபட்டிருப்பதாக பொலீஸ் விசாரணைகளின்போது தெரியவந்துள்ளபோதிலும் இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அன்னை பூபதி நினைவாக சிரமதானம்

கரவெட்டி,ஏப்.18

தியாகி அன்னை பூபதியின் 17 ஆவது நினைவு தினத்தையொட்டி வடமராட்சி வெண்மை வாணிப சங்கத்தினரால் வடமராட்சிப் பகுதியில் நேற்று சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

காலை 8.30 மணிமுதல் மதியம் ஒரு மணி வரை இடம்பெற்ற இச்சிரமதான பணியில் மில்லர் பூங்கா, நெல்லியடி மத்திய மகாவித்தியாலய வீதி ஆகிய இடங்கள் துப்புரவு செய்யப்பட்டன.

இப்பணியில் வடமராட்சி வெண்மை வாணிப சங்கத்தின் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

(ஒ-12-70)

## பகுதி நேர ஆங்கில ஆசிரியருக்கு

யாழ்ப்பாணம்,ஏப்.18

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பணியில் உள்ள அனைத்துப் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களையும் உள்வாங்குவது தொடர்பாக கூட்டம் ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு ஆரியகுளம் உயர் கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களையும் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றுமாறு வடக்கு - கிழக்கு மாகாணப் பகுதிநேர ஆங்கில ஆசிரிய சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

மேற்படி கூட்டத்திற்கு வருகை தருபவர்கள் தமது சேவைக்காலம் தொடர்பான ஆவணம் உட்பட ஏனைய ஆவணங்களையும் கொண்டு வருதல் வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளனர்.

(ஒ-203)

## யாழ். வைத்தியசாலையில் பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை

தாவடி,ஏப்.18

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை நிபுணர்கள் அமெரிக்காவில் இருந்து இன்று வருகைதர உள்ளார்கள். யாழ். மற்றும் கொழும்பு தெற்கு றோட்டறிக் கழகங்களினது இணைந்த செயற்பாட்டில் இந்த வைத்திய சிகிச்சை வழங்கப்படவுள்ளது. இக்குழுவினர் நாளை செவ்வாய்க்கிழமை தொடக்கம் ஒருவார காலத்திற்கு நோயாளர்களைப் பார்வையிடுவார்கள்.

போரினாலும் சுனாமி அனர்த்தத்தாலும் மற்றும் பிறப்பாலும் உறுப்புகள் பாதிக்கப்பட்டவர்களை இவர்கள் பார்வையிட்டு சிகிச்சைகளை வழங்குவார்கள்.

(ஒ-149)

## சாயிபாபாவிடம் ஆசிபெற்றார் அநுரா

கொழும்பு,ஏப்.18

இவ்வருடத்தில் நாட்டில் முக்கியமான பல அரசியல் தீர்மானங்கள் எடுக்கப்படலாமென்று செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கும் நிலையில் சுற்றுலாத்துறை அமைச்சரும், ஜனாபதியின் சகோதரருமாகிய அநுரா பண்டாரநாயக்க, பெங்களூரில் பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபாவைத் தரிசித்து ஆசிபெற்றிருக்கின்றார்.

புட்டபர்த்தியில் சாயிபாபாவுடன் அமைச்சர் நீண்டநேரம் தனியாகக் கலந்துரையாடினார் என அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன. இதில் எதிர்காலத்தில் தாம் மேற்கொள்ளவிருக்கும் முக்கியமான செயற்பாடுகளை சாயிபாபாவிற்கு விவரித்து அவரது ஆசியை அநுரா பெற்றார் என்று அந்த வட்டாரங்கள் மேலும் கூறின.

தனிப்பட்ட முறையில் பெங்களூருக்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தபோதும் அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க, கர்நாடக மாநில முதலமைச்சர் தர்மன் சிங், மாநில கைத்தொழில்துறை அமைச்சர் சிந்தியா ஆகியோரையும் சந்தித்தாரெனத் தெரிவிக்கப்படுகிறது.

(க)

# சொந்த மண்ணில் இந்தியாவை வீழ்த்தி பாகிஸ்தான் அணி அசத்தலான வெற்றி!

இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கிடையே டில்லியில் நேற்று நடைபெற்ற 6ஆவதும் இறுதியுமான ஒருநாள் ஆட்டத்தில் பாகிஸ்தான் 159 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. இதன்படி 6 ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரை 4-2 என்ற முன்னிலையில் பாகிஸ்தான் கைப்பற்றியது.

இந்த ஆட்டத்துக்கான இந்திய அணியில் பாலாஜி விளையாடவில்லை. அவருக்குப் பதிலாக அகார்கர் களமிறங்கினார். பாகிஸ்தான் அணியில் எந்தவித மாற்றமும் செய்யப்படவில்லை.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடியது பாகிஸ்தான். பட், அப்ரிடி தொடக்க வீரர்களாகக் களமிறங்கினர். முதல் ஓவரை எதிர்கொண்ட பட் 2 ஓட்டங்களை எடுத்தார். நெஹ்ரா வீசிய 2 ஆவது ஓவரில் அப்ரிடி 4 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக 22 ஓட்டங்களை விளாசினார். 3ஆவது ஓவரில் இந்த ஜோடி பிரிந்தது. பட் 3 ஓட்டங்களில் சஹிர்கானின் பந்தில் ஆட்டமிழந்தார்.

அப்ரிடி தொடர்ந்து அதிரடியாக ஆட 5.2 ஆவது ஓவரில் அணி 50 ஓட்டங்களைத் தொட்டது. 9.2 ஆவது ஓவரில் அப்ரிடி 44 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். மூன்றாவது விக்கெட்டுக்காக மலிக்குடன், யுஹானா ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி பொறுப்புடன் விளையாடி ஓட்டங்களைக் குவித்தது. மலிக் 59பந்துகளில் 6பவுண்டரிகள் அடங்கலாக அரைச்சதம் அடித்தார். அவரைத் தொடர்ந்து யுஹானா 59பந்துகளில் 3 பவுண்டரிகள், ஒரு சிக்ஸருடன் அரைச் சதத்தைத் தொட்டார்.

26 ஆவது ஓவரில் இந்த ஜோடி பிரிந்தது. யுஹானா 50 ஓட்டங்களில் 'ரன் அவுட்' ஆனார். அடுத்து இன்ஸமாம் களமிறங்கினார். அவர் தொடக்கத்தில் இருந்தே அதிரடியாக ஆடினார். அணி 191 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது மலிக் 72 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

5ஆவது விக்கெட்டுக்காக யூனுஸ்கான் இன்ஸமாமுடன் ஜோடி சேர்ந்தார். இருவரும் அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்தனர். 5ஆவது விக்கெட்டுக்காக இவர்கள் 95 ஓட்டங்களைப் பகிர்ந்துகொண்டனர் என்பது நேற்றைய ஆட்டத்தின் சிறப்பம்சமாகும். யூனுஸ்கான் 40 ஓட்டங்களில் ஆட்டமிழந்ததார்.

அடுத்துக் களமிறங்கிய ரசாக் ஓட்டம் எதுவும் பெறாத நிலையில் ஆட்டமிழந்தார். ஆட்டத்தின் கடைசி ஓவரில் இன்ஸமாம் 68 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இறுதியில் 50 ஓவர்கள் முடிவில் பாகிஸ்தான் 8 விக்கெட்டுக்களை இழந்து 303 ஓட்டங்களைக் குவித்தது.

பந்துவீச்சில் இந்திய அணி சார்பாக அகார்கர், நெஹ்ரா ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.



வெற்றிக் கிண்ணத்துடன் பாக்.அணித் தலைவர் இன்ஸமாம்

வெற்றி இலக்காக 304 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற நிலையில் பதிலளித்தாடியது இந்தியா. ஷேவாக், டெண்டுல்கர் தொடக்க ஆட்டக்காரர்களாகக் களமிறங்கினர். ஆட்டம் தொடங்கியதும் ஷேவாக் அதிரடியாக ஆடினார். அணி 31 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது ஷேவாக் 21 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து டெண்டுல்கரும் 9 ஓட்டங்களுடன் விரைவாக வெளியேறினார்.

மூன்றாவது விக்கெட்டுக்காக தோனியும், டிராவிட்டும் ஜோடி சேர்ந்தனர். 64 ஓட்டங்களை இந்திய அணி பெற்றிருந்தபோது டிராவிட் யுஹானாவால் 'ரன் அவுட்' ஆனார். அவருக்குப் பதிலாக யுவராஜ் களமிறங்கினார். இவரும் 13 ஓட்டங்களுடன யுஹானாவால் 'ரன் அவுட்' ஆனார். அவர் ஆட்டமிழந்த சிறிது நேரத்தில் தோனி 24 ஓட்டங்களில் அர்ஷாத் கானின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். அப்போது இந்திய அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 93 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

அடுத்து களமிறங்கிய கைப் 4 ஓட்டங்களுடனும், தினேஷ் மொங்கியா ஓட்டம் எதுவும் பெறாத நிலையிலும் ஆட்டமிழந்தனர். இதன்படி 94 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுக்களை இழந்து இந்தியா தோல்வியின் விளிம்பில் இருந்தது. இதையடுத்து ரசிகர்கள் தண்ணீர்ப் போத்தல்களை மைதானத்துக்குள் எறிந்து ஆர்ப்பாட்டம் செய்தனர். இதனால் ஆட்டம் சிறிதுநேரம் இடைநிறுத்தப்பட்டது. மைதானத்தில் வீசிய போத்தல்களை பொலீஸார் அப்புறப்படுத்திய பின் ஆட்டம் தொடர்ந்தது.

8 ஆவது விக்கெட்டுக்காக அகார்கர், ஹர்பஜன் களத்தில் இருந்தனர். அகார்கர் 16 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது அப்ரிடியின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். அடுத்த சஹிர்கான் களமிறங்கினார். அவர் சிக்ஸர் ஒன்றை அடித்து 7 ஓட்டங்களில் வெளியேற நெஹ்ரா களமிறங்கினார். அவரும் ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழக்க 37 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து இந்தியா 144 ஓட்டங்களைப் பெற்றது. இதன்படி பாகிஸ்தான் 159 ஓட்டங்களால் அபார வெற்றியடைந்தது.

பந்துவீச்சில் பாகிஸ்தான் சார்பாக அர்ஷாத்கான் 3 விக்கெட்டுக்களையும், அப்ரிடி 2 விக்கெட்டுக்களையும், நவீட், இப்திகார், ரசாக் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

பாகிஸ்தான் சார்பாக 72 ஓட்டங்களைக் குவித்த மலிக் ஆட்டநாயகனாகத் தெரிவுசெய்யப்பட்டார். ஒருநாள் தொடரின் 6ஆட்டங்களிலும் மொத்தமாகப் 15 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய நவீட் ஹல் ஹசன் தொடரின் நாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார்.

கடந்த ஆண்டு ஏப்ரலில் பாகிஸ்தான் சென்று ஒருநாள் தொடரையும், டெஸ்ட் தொடரையும் இந்தியா கைப்பற்றியது. தற்போது பாகிஸ்தான் இந்திய மண்ணில் ஒருநாள் தொடரைக் கைப்பற்றி அதற்குப் பழிவாங்கிவிட்டது.

(க)

# இந்தியா - பாகிஸ்தான் உறவு வலுக்க பாக். அதிபர் பள்ளிவாசல் தொழுகை

புதுடில்லி,ஏப்.18

இந்தியா - பாகிஸ்தான் இடையேயான உறவு வலுப்படவேண்டும். நாடுகளுக்கிடையில் அமைதி நிலவவேண்டும் என இந்தியாவின் ராஜஸ்தான் மாநில அஜ்மீர் பள்ளிவாசலில் தான் தொழும் போது பிரார்த்தனை செய்ததாகப் பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இஸ்லாமாபாத்தில் இருந்து இந்தியாவின் ராஜஸ்தான் மாநில தலைநகர் ஜெய்ப்பூருக்கு விசேட விமானத்தில் வந்த முஷாரப் பிற்பகல் அஜ்மீர் பள்ளிவாசலில் தொழுகை நடத்திவிட்டு பத்திரிகையாளர்களுக்கு மேற்கண்டவாறு கூறினார்.

விமான நிலையத்தில் ராஜஸ்தான் முதல்வர் வசுந்தரா ராஜே ஜனாதிபதி முஷாரப்பிற்கும் அவரது மனைவி ஷிபாவும் மலர்க்கொத்து வழங்கி வரவேற்றார். பின்னர், விமான நிலையத்தில் தயாராக இருந்த 3 இந்திய விமானப்படை ஹெலிகொப்டர்களில் முஷாரப்பும் அவருடன் வந்திருந்தவர்களும் அஜ்மீர் பள்ளிவாசலுக்குச் சென்றனர்.

பள்ளிவாசலில் சையது நஜீபா ஹுசைன் ஜனாதிபதி முஷாரப்பிற்குப் பாரம்பரிய தலைப்பாகை கட்டி வரவேற்றார் என்றும் -

தர்காவினுள்ளே முஷாரப் தம்பதிகளுக்குச் சிறப்புப் பூவேலைப்பாடுகளுடன் கூடிய இரண்டு பச்சை நிறக்கம்பளி உடைகள் வழங்கப்பட்டன என்றும் செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

முஷாரப் செய்தியாளர்களை நோக்கிக் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்தியா - பாகிஸ்தான் மக்கள் அமைதியாக வாழவேண்டும். வாழ்வில் வளம்பெற வேண்டும். இரு நாடுகளுக்கிடையிலான உறவு மேலும் வலுப்படவேண்டும்.

அஜ்மீர் பள்ளிவாசலில் முதன்முறையாகத் தொழுகை நடத்த எனக்கும் என் மனைவிக்கும் என்னுடன் வந்துள்ள ஏனையோருக்கும் கிடைத்த இந்த வாய்ப்பைப் பெரும் கெளரவமாக நினைக்கிறேன் என்றும் கூறினார்.



அப்போது முஷாரப்புடன் பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் குர்ஷீத் முகமது சகூரி, தகவல் தொடர்புத்துறை அமைச்சர் ஷேக் ரஷீத் அகமது ஆகியோரும் இருந்தனர்.

அதன் பின்னர் விசேட விமானம் மூலம் தலைநகர் புதுடில்லிக்குச் சனிக்கிழமை மாலை சென்ற முஷாரப்பை இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங் வரவேற்றார்.

ஜனாதிபதி முஷாரப், அவரது மனைவி ஷீபா, அமைச்சர்கள், அதிகாரிகள் அடங்கிய உயர் மட்டக்குழுவை இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங் அழைத்துச் சென்றபோது ஜனாதிபதியும் அவரது மனைவியும் பத்திரிகையாளர்களை நோக்கிக் கையசைத்தனர்.

இந்தியத் தலைநகர் புதுடில்லியில் நேற்று நடைபெற்ற இந்திய - பாகிஸ்தான் கிரிக்கெட் போட்டியையும் முஷாரப் கண்டுகளித்தார்.

## முஷாரப்புக்கு எதிராக ஆர்ப்பாட்டம் சிவசேனைக் கட்சியினர் 150 பேர் கைது!

புதுடில்லி,ஏப்.18

இந்தியா - பாகிஸ்தான் கிரிக்கெட் போட்டியைக்காண டில்லி வந்துள்ள பாகிஸ்தான் அதிபர் முஷாரப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் நடத்திய சிவசேனைக் கட்சித் தொண்டர்கள் 150 பேர் ஞாயிற்றுக்கிழமை கைதுசெய்யப்பட்டனர்.

அதிபர் முஷாரப் இந்தியா வருவதற்கு சிவசேனைக்கட்சியினர் ஏற்கனவே, எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். டில்லியில் இந்தியா - பாகிஸதான் போட்டியை நடக்கவிடாமல் தடுப்போம் என்றும் மிரட்டல் விடுத்திருந்தனர்.

இந்த நிலையில் ஞாயிற்றுக்கிழமை முஷாரப் எதிர்ப்பு கோஷங்களுடன் பெரோஷா கோட்லா மைதானம் நோக்கி வந்த 150 இற்கும் மேலான சிவசேனைத் தொண்டர்களை பொலீஸார் தடுத்து நிறுத்தினர். பின்னர் அவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

(ஐ)

உலக அரங்கில்

## அமெ. கலிபோர்னியா மாநிலத்தில் நில அதிர்வு

நியூயோர்க்,ஏப்.18

அமெரிக்காவின் தென் கலிபோர்னியா மாநிலத்தில் நேற்றுமுன்தினம் சக்திவாய்ந்த நில அதிர்வொன்று ஏற்பட்டது என நில அதிர்ச்சி ஆய்வாளர்கள் தெரிவித்தனர். லொஸ் ஏஞ்சல்ஸ் நகரிலிருந்து பல மைல் தொலைவில் ஏற்பட்ட இந்த நில அதிர்வு ரிச்டர் அளவுகோலில் 5.1 புள்ளியாக பதிவாகியிருந்தது எனத் தெரிவிக்கப்படுகிறது.

உள்ளூர் நேரப்படி நேற்றுமுன்தினம் இரவு 12.18 மணியளவில் ஏற்பட்ட இந்த நில அதிர்வினால் ஏற்பட்ட சேதம், உயிரிழப்புகள் குறித்து உடனடியாக விவரங்கள் எதுவும் பெறப்படவில்லை என நகர ஆளுநர் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தோனேஷியாவின் நியாஸ் தீவிலும் நேற்றுமுன்தினம் இரவு சக்திவாய்ந்த நில அதிர்வொன்று ஏற்பட்டது. அந்த நில அதிர்வு ரிச்டர் அளவு கோலில் 6.3 புள்ளியாக பதிவாகியிருந்தது என இந்தோனேஷிய நில அதிர்வு ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தோனேஷியாவின் மெடன் நகருக்கு தென்கிழக்கே சுமார் 220 கிலோமீற்றர் தொலைவில் இந்த நில அதிர்வு ஏற்பட்டது என்றும்-

இந்த நில அதிர்வு காரணமாக நகரின் மின்சாரம் துண்டிக்கப்பட்டது என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த மாதம் நியாஸ் தீவில் ஏற்பட்ட நில அதிர்வு காரணமாக சுமார் 2 ஆயிரம் பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## முஷாரப்புக்கு பிறப்புச் சான்றிதழ் மன்மோகன் சிங் வழங்கினார்

புதுடில்லி,ஏப்.18

டில்லி மருத்துவமனையில்தான் பாகிஸ்தான் அதிபர் முஷாரப் பிறந்தார். இதையடுதது, அவரது பிறப்புச் சான்றிதழைத் தயாரித்து அவரிடம் பரிசாக அளித்தார் பிரதமர் மன்மோகன் சிங்.

டில்லியில் சாந்தினி செளக் பகுதியில் முஷாரப்பின் மூதாதையர் வாழ்ந்த நெகர்வால் ஹவேயின் தத்ரூபமாக வரையப்பட்ட ஓவியத்தையும் பரிசளித்தார் பிரதமர்.

இதையடுத்து, சற்றே பழைய நினைவுகளில் மூழ்கி ஆனந்தப் பரவசப்பட்டார் முஷாரப்.

டில்லி கமலா மார்க்கெட்டில் லாலா கிரிதாரி லால் மகப்பேறு மருத்துவமனையில்தான் முஷாரப் அவரது சகோதரர், சகோதரி பிறந்தனர்.

கடந்த மாதம் முஷாரப்பின் தாயார், மூத்த சகோதரர் டில்லிக்கு வந்திருந்தனர்.

அந்த மருத்துவமனைக்குச் சென்றனர். முஷாரப், அவரது சகோதரரின் பிறப்புச் சான்றிதழ் கிடைக்குமா என்று முஷாரப்பின் தாயார் கேட்டார்.

இதையடுத்து, பழைய ஆவணங்களை ஆராய்ந்து, முஷாரப் அவரது சகோதரர், சகோதரி ஆகியோரின் பிறப்புத் திகதியை அறிந்து சான்றிதழ்களை தயார் செய்தனர். அவற்றை ஞாயிற்றுக்கிழமை முஷாரப்பை சந்தித்தபோது அளித்தார் மன்மோகன்சிங். (ஐ)

## ஈராக் சிறைச்சாலையில் 11 கைதிகள் தப்பியோட்டம் தீவிர தேடுதலின் பின் 10 பேர் மீண்டும் கைது

பக்தாத்,ஏப்.18

ஈராக்கின் மிகப்பெரிய சிறைச்சாலையான பக்கா சிறைச்சாலையில் இருந்து பதினொரு சிறைக்கைதிகள் தப்பியோடினர். பின் பல மணிநேர தீவிரமான தேடல் நடவடிக்கையின் பின்னர் 10 கைதிகள் மீண்டும் கைதுசெய்யப்பட்டனர் என சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன. அமெரிக்கத் தடுப்புக்காவல் நிலையங்கள் சூழக்காணப்படும் ஈராக்கின் மிகப் பெரிய சிறைச்சாலையான பக்கா சிறையிலிருந்து நேற்றுமுன்தினம் அதிகாலை கைதிகள் தப்பியோட முயன்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 6 ஆயிரம் கைதிகள் சிறை வைக்கப்பட்டுள்ள மேற்படி சிறைச்சாலையில் பெரிய ஓட்டை ஒன்றின் மூலம் கைதிகள் தப்பிச் சென்றுள்ளனர். தப்பியோடிய கைதிகளில் ஒருவரான ஹசைன் நிமா என்பவரிடம் (24 வயது) தப்பிசெல்ல முயன்றமைக்கான காரணத்தை வினவியபோது "இங்கு மிகக் கொடூரமான முறையில் எங்களை நடத்துகின்றார்கள். அத்துடன், மிகத் தாமதமாகவே விசாரணைகளைச் செய்கிறார்கள். அதுவரை எங்களால் இங்கு இருக்க முடியவில்லை" - என்று கூறினார்.

சிறைச்சாலை அதிகாரிகள் உடனடியாக தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டதனால் தப்பியவர்களில் 10 பேர் மீண்டும் கைதுசெய்யப்பட்டனர். என ஈராக்கிய இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

குறிப்பிட்ட சிறைச்சாலையில் கைதிகளுக்கு இடையில் இரண்டு நாள்களுக்கு முன்னர் ஏற்பட்ட மோதலை அடுத்தே இவர்கள் தப்பியோட முயன்றுள்ளனர் என இராணுவ அதிகாரி ஒருவர் கூறினார்.

மேற்படி மோதலில் ஒரு பாதுகாப்பு அதிகாரி உயிரிழந்தார். 12 பேர் காயமடைந்தனர் என அமெரிக்க இராணுவத்தினர் தெரிவித்த போதிலும் இந்த மோதல் அமெரிக்க படையினருக்கும், கைதிகளுக்கும் இடையிலேயே எற்பட்டது என கைதியொருவர் தெரிவித்தார்.

## பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதியின் கணவர் மீண்டும் வீட்டுக் காவலில்!

இஸ்லாபாத்,ஏப்.18

பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி பெனாஸீர் பூட்டோவின் கணவர் ஆசிப் அலி ஜர்தாரி வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார் எனப் பாகிஸ்தானிலிருந்து தகவல்கள் வெளியாகி உள்ளன.

கடந்த சனிக்கிழமை டுபாயிலிருந்து நண்பர்கள், பத்திரிகையாளர்களுடன் விமானம் மூலம் லாகூர் வந்த ஆசிப் அலி ஜர்தாரியைத் தனியாக அழைத்துச்சென்ற பொலீஸார் பின்னர் வீட்டுக்காவலில் வைத்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ஆசிப் அலி ஜர்தாரியை வரவேற்க பாகிஸ்தான் மக்கள் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான மக்டும் அமீம் மாஹிம் தலைமையில் ஆயிரக்கணக்கான தொண்டர்கள் லாகூர் விமான நிலையத்திற்கு வந்திருந்தனர் என்றும் -

ஆனால், அவர்களைப் பொலீஸார் உள்ளே அனுமதிக்க மறுத்ததனால் பொலீஸாருக்கும், கட்சித் தொண்டர்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதல் காரணமாக ஜர்தாரியின் ஆதரவாளர்கள் பலர் கைதுசெய்யப்பட்டனர் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஜர்தாரியின் வருகையின் காரணமாக வன்செயல்கள் இடம்பெறலாம் எனக் கிடைத்த தகவல்களைத் தொடர்ந்து லாகூர் விமானநிலையம் மூடப்பட்டது. முன்னெச்சரிக்கையாகப் பலர் கைதுசெய்யப்பட்டனர்.

மேலும் ஜர்தாரியும் அவரது ஆதரவாளர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று கூறப்படும் செய்தியைப் பாகிஸ்தான் செய்தித்துறை அமைச்சர் ஷேக் ரஷீத் மறுத்துள்ளார்.

ஜர்தாரி வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளார். எனினும், அவரது நடமாட்டத்திற்கு எந்தத் தடையும் இல்லை. அவர் எங்கு வேண்டுமானாலும் செல்லலாம். அவருடைய ஆதரவாளர்களும் இன்னும் சில தினங்களில் விடுவிக்கப்படுவர் என்று அவர் மேலும் கூறினார்.

ஊபுல் மற்றும் கொலை வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டு சிறையில் இருந்த ஜர்தாரி கடந்த வருட இறுதியிலேயே பிணையில் விடுதலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

(த-க)

## வெளிநாட்டு வேலைவாய்ப்புகளினால் வருமானம் ஈட்டுவதில் இந்தியா முன்னணி

### உலக வங்கி அறிக்கை

வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் மூலம் வருவாய் ஈட்டுவதில் இந்தியா முன்னணியிலுள்ளது என உலக வங்கி அறிக்கை வெளியிட்டுள்ளது.

வெளிநாடுகளில் வேலைசெய்யும் இந்தியர்கள ஈட்டும் வருவாயின் மொத்த அளவு, கடநத ஆண்டில் ஏனைய நாடுகளை விட அதிகரித்து முன்னணியில் உள்ளது என உலக வங்கி மேற்கொண்ட ஆய்விலே தெரியவந்துள்ளது என்று அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

வெளிநாடுகளில் வேலை செய்து வருவாய ஈட்டுவதில் சீனா, மெக்ஸிகோ மற்றும் பிரேசில் ஆகிய நாடுகளே முன்னணியில் இருந்தன.

ஆனால், 2004 ஆம் ஆண்டில் இந்தியா ஒரு லட்சத்து 35 ஆயிரம் கோடி ருபாவை வருவாயாக ஈட்டி (இந்திய நாணயப்படி) உலகில் முன்னணி பெற்றுள்ளது.

2003 ஆம் ஆண்டு இத்தொகை (இந்திய நாணயப்படி) 84 ஆயிரம் கோடியாக இருந்தது. இத தொகை இந்தியாவின் உள்நாட்டு வருமான வரியை விடவும் இரு மடங்கு அதிகமாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.




## பணயக் கைதிகளான ஷியாக்களை விடுவிக்க உள்ளூர் மற்றும் அமெ.படையினர் நடவடிக்கை

பக்தாத்,ஏப்.18

மத்திய ஈராக்கின் மதய்ன் நகரில் சுனி கிளர்ச்சிவாதிகளால் பணயக் கைதிகளாகப் பிடித்துவைக்கப்பட்டுள்ள ஷியா முஸ்லிம்களை மீட்பதற்கான நடவடிக்கைகளை உள்ளூர் மற்றும் அமெரிக்கப் படையினர் ஆரம்பித்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஷியா மற்றும் சுனி முஸ்லிம்கள் வாழும் மதய்ன் நகரில் ஷியா முஸ்லிம்களை உடனடியாக வெளியேறுமாறு கோரியே அவர்களை கடந்த வெள்ளிக்கிழமை பணயக் கைதிகளாக சுனி கிளர்ச்சிவாதிகள் பிடித்துவைத்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மதய்ன் நகரில் உள்ள ஷியாக்கள் உடனடியாக வெளியேறாவிட்டால் பணயக் கைதிகளாக பிடித்து வைக்கப்பட்டிருக்கும் ஷியாக்கள் கொல்லப்படுவர் என கிளர்ச்சிவாதிகள் ஒலிபெருக்கியில் எச்சரித்தனர் என்றும்-

35 தொடக்கம் நூறு பேர் வரையிலான ஷியாக்கள் பணயக் கைதிகளாக பிடித்து வைக்கப்பட்டிருக்கலாம். எண்ணிக்கை சரியான முறையில் தெரியவில்லை என்றும் ஈராக்கின் பாதுகாப்பு அமைச்சர் காஸிம் தாவூத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்

பணயக் கைதிகளாகப் பிடித்து வைக்கப்பட்டுள்ளவர்களின் உறவினர்கள் அவர்களை விடுவிக்க உதவுமாறு எம்மிடம் வேண்டுகோள் விடுததனர். இளைஞர்கள், வயோதிபர்கள் அனைவரும் பணயக் கைதிகளாகப் பிடித்து வைக்கப்பட்டுள்ளனர். படையினர் விரைவில் அவர்களை மீட்டு விடுவார்கள் என்று அவர் பத்திரிகையாளர்களுக்குத் தெரிவித்தார்.

# திருக்குளிர்த்திப் பெருவிழா

கோப்பாய்,ஏப்.18

கோப்பாய் பலானை கண்ணகை அம்மன் கோயில் வருடாந்த திருக்குளிர்த்திப் பெருவிழா இன்று திங்கட்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். அன்னதானம் வழங்கும் நிகழ்வு பகல் ஒரு மணிக்கு இடம்பெறும்.

இதனை முன்னிட்டு அம்பாளின் கிராம தரிசனம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்றது.

(த-72)

# நபிகள் நாயகத்தின் பிறந்தநாள் விழா

திருநெல்வேலி சத்தியசாயி நிலையத்தில் எதிர்வரும் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நபிகள்நாயகத்தின் பிறந்தநாள் விழா நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரியின் அதிபர் ஜனாப் எம்.எஸ்.ஏ.எம். முபாரக் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.(த-203)

# இடமாற்றம்

தென்மராட்சி கல்வி வலய விளையாட்டுத் துறை உதவிக் கல்விப் பணிப்பாளர் க.குமாரசாமி யாழ்.கல்வி வலயத்திற்கு இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளார். இவர் கடந்த எட்டு வருடங்களாக வலயத்தில் விளையாட்டுத்துறை முதன்மை ஆசிரியராகவும் உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

யாழ்.வலயத்தில் வெற்றிடமாகவிருந்த உதவிக் கல்விப்பணிப்பாளர் (விளையாட்டுத் துறை) பதவிக்கு இடமாற்றஞ்செய்யபபட்ட இவர் கடந்த 30ஆம் திகதி தமது புதிய கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

(த-117)


## யாழ் நகரில் கோலாகலத் திறப்பு விழா!!

## கொட்வின் கணணிப் பதிப்பகம்
**Godwin Computer Printers**

அன்புடையீர்! நிகழும் 18.04.2005 திங்கட்கிழமை காலை 10.30 மணியளவில் எமது பதிப்பகம் ஆரம்பித்து வைக்கப்படுமென வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

**எமது சேவைகளான,**

திருமண-பூப்புனித நீராட்டுவிழா அழைப்பிதழ்கள், கண்ணீர் அஞ்சலி-களியாட்டுவிழா பிரசுரங்கள், கல்வெட்டுப்புத்தகங்கள் கணனி வடிவமைப்பு மூலம் "ஓப்(f)செற்" பதிப்பிலும், ஸ்கிறீன் பிறிண்டிங், பழைய-புதிய புத்தகக்கட்டு வேலைகள், குறைந்த கட்டணத்தில் உடனுக்குடன் செய்துகொடுக்கப்படும்.

கொட்வின் கொம்பியூட்டர் சேவிஸ
69/14, கொழும்புத்துறை வீதி,
கண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

644, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

குறிப்பு:- எமது ஸ்தாபனத்திற்கு பெண் பக்கவடிவமைப்பாளர் (பயிலுனர்) தேவை. 19.04.05 அன்று சுயவிபரங்களுடன் சமூகம் தரவும். நேரம் காலை 10.00 மணிமுதல் 4.00 மணிவரை.



## உப மருந்தாளர் பயிற்சிநெறி ஆரம்பம்

**கிளிநொச்சியில் நடைபெற்றுவந்த உப மருந்தாளர் பயிற்சிநெறி 'சுனாமி' இயற்கை அனர்த்தம் காரணமாக ஒத்திவைக்கப்பட்டது. தற்போது மீண்டும் 23-04-2005 அன்று தொடக்கம் வழமைபோல் பயிற்சிநெறி ஆரம்பமாக உள்ளதால் பயிற்சியாளர்களைப் பயிற்சிக்குத் தவறாது சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.**

நிர்வாகம்,
**நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனம்,**
**கிளிநொச்சி.**

(சி-42362)(26-14-18)



## Fashion Beauty Corner

**இதோ!**
**விசேட பயிற்சிக் கருத்தரங்கு வகுப்புகள் ஆரம்பம்!**

பிரபல அழகுக்கலை நிபுணர் **திருமதி ஜெயவாணி கஜேந்திரன்** அவர்களால் ஒழுங்குசெய்யப்பட்டு ஆஸ்திரேலியாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல அழகுக் கலை நிபுணர் **திருமதி தர்சினி நிரஞ்சன்** அவர்கள் வெளிநாட்டு நவீன முறையிலான முக ஒப்பனைகள், பேஷியல், தலை அலங்காரங்கள் பற்றி புதிய விளக்கங்களை இன்றும் (18.04.2005) நாளையும் (19.04.2005) காலை 10.00 மணிக்கு அறிமுகப்படுத்தவுள்ளார்.

இந்த வகுப்புகளில் கலந்துகொள்வோருக்கான விசேட சான்றிதழ்கள் வகுப்பின் இறுதி நாளன்று வழங்கப்படும்.

**ஆர்வமுள்ள அனைவரும் கலந்துகொள்ளவும்.**

**- அழகுக்கலை நிபுணர்.**






## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

HAPPY BIRTHDAY



கட்டைப்புளியடி,
அல்வாய் மேற்கைச் சேர்ந்த
தர்மகுலசிங்கம் - செல்வராணி தம்பதிகளின்
செல்வப் புதல்வன் **தணிகைச்செல்வன்** தனது முதலாவது பிறந்த நாளை இன்று (18.04.2005) திங்கட்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை நவிண்டிலைச் சேர்ந்த அப்பம்மா, நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த தர்மரத்தினம் (பெரியப்பா) குடும்பம், நவிண்டிலைச் சேர்ந்த பாஸ்கரன் (சித்தப்பா) குடும்பம், மகேஸ்வரி (அத்தை) குடும்பம், நாகேஸ்வரன் (மாமா) குடும்பம், கட்டைப்புளியடியைச் சேர்ந்த கெங்காதரன் (சித்தப்பா) குடும்பம், செல்லக்குட்டி (சித்தப்பா) குடும்பம், பரஞ்சோதி (மாமா) குடும்பம், கந்தசாமி (மாமா) குடும்பம், கொடிகாமத்தைச் சேர்ந்த நல்லதம்பி சரஸ்வதி (பெரியம்மா) குடும்பம், சிவமாறன் (பெரியண்ணா) குடும்பம், சிவதீபன் (சின்னண்ணா) குடும்பம், ராசமணி (ஆசைமாமி) குடும்பம், புலேந்திரன் குடும்பம், திக்கத்தைச் சேர்ந்த சிறீபவான் குடும்பம், வள்ளிபுனத்தைச் சேர்ந்த ஆனந்தராசா குடும்பம், கட்டைப்புளியடியைச் சேர்ந்த கேதீஸ் குடும்பம் ஆகியோர் பல்கலையும் பெற்றுப் பல்லாண்டுகாலம் நலமுடன் நீடுழி வாழ வாழ்த்துகின்றனர்.



செல்வன்
**தணிகைச்செல்வன்**

18-04-2005

கட்டைப்புளியடி,
அல்வாய் மேற்கு, அல்வாய்.

தகவல்
அப்பா, அம்மா, அண்ணா.

(44332) (54-16-18)



# நாதஸ்வர, தவில் கச்சேரி
## மாதகல், நுணசை
## அருள்மிகு ஸ்ரீ முருகமூர்த்தி கோயில்

வருடாந்த மஹோற்சவ 8ஆம் திருவிழா நிகழ்ச்சியாகச் சிறப்பு நாதஸ்வர, தவில் கச்சேரி இடம்பெறும்.

**காலம்: 20-04-2005 புதன்கிழமை**
**நேரம்: மாலை 6.00 மணியளவில்**

**நாதஸ்வரம்**

கோண்டாவில் நாதஸ்வர இசையருவி
**V.K.** பஞ்சமூர்த்தி அவர்களும்

சாவகச்சேரி இன்குழல் வேந்தன்
**M.P.**நாகேந்திரன் இவர்களுடன்
கோண்டாவில்,
லயஞானபாலதீரன்
**K.P.** குமரேஸ் இவர்களின்
நாதஸ்வரத்திற்கு

**சிறப்பு தவில் வித்துவான்களாக**

**தவில்**

இந்தியா, தமிழ்நாடு, திருப்புன்கூர்
கலைமாமணி **T.G.**முத்துக்குமாரசாமி
இவர்களுடன் மறைந்த தவில்
சக்கரவர்த்தி அளவெட்டி
லயஞான குபேரபூபதி
***V.***தெட்ஷணாமூர்த்தியின் புதல்வன்
***T.***உதயசங்கரும்
மறைந்த தவில் மேதை இணுவில்
விவகார வித்வமணி
***N.R.***சின்னராசாவின் மகன்
***R.S.***சுதாகரனும்

மாலை 4.00 மணியளவில் முருகப்பெருமானின் வேட்டைத் திருவிழாவின்போது வட்டுக்கோட்டை நாட்டுக்கூத்து அபிவிருத்திக் குழுவினர் அளிக்கும் கிராமியக் கலைகளான குதிரை ஆட்டம், கரகாட்டம், அனுமான் ஆட்டம், பொம்மலாட்டம் ஆகியன இடம்பெறும்.

அடியார்கள் அனைவரும் வருக! அறுமுகன் அருள் பெறுக!!

8ஆம் திருவிழா உபயகாரர்,
**மு.நடராஜகுமாரன்,**
நுணசை, மாதகல்.

(44309)(26-14-18)

**திரு.கணபதிப்பிள்ளை பாலசுப்பிரமணியம்**
ஆலய தர்மகர்த்தா.

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# உன்னத இலட்சியத்துக்காக உயிர் நீத்த அன்னை

ஈழத்தமிழ் மக்களின் உரிமைகளுக்காய் - கௌரவமான வாழ்வுக்காய் - இருப்புக்காய் - இந்திய வல்லாதிக்கத்தை எதிர்த்து உண்ணாநோன்பிருந்து மரணத்தைத் தழுவிய அன்னை பூபதியின் பதினேழாவது ஆண்டு நினைவுதினம் நாளையாகும்.

காந்தி தேசத்துக்கே காந்தீயத் தத்துவத்தைப் போதித்த ஈழத் தியாகிகள் இருவர். ஒருவர் தியாகி திலீபன். மற்றவர் அன்னை பூபதி. அந்தப் பூபதித் தாயின் நினைவுதினம்தான் நாளை தமிழர் தாயகம் எங்கும் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்படவிருக்கின்றது.

ஆயுதம் ஏந்திய விடுதலைப் போராட்டத்தின் களமுனைகளில் வீரஞ்செறிந்த தமது வியத்தகு சாதனைகள் பலவற்றையும் நிரூபித்து, வெளிப்படுத்தியவர்கள் புலிகள்.

மன உறுதிமிக்க அந்தப் போராளிகள் அஹிம்சைப் போராட்டத்திலும் தாங்கள் சளைத்தவர்கள் அல்லர் என்பதையும் அவ்வப்போது நிரூபிக்கத் தவறவில்லை.

இந்திய வல்லாதிக்கம் தனது பூகோள நலனை முன்னிறுத்தி, அதற்காக ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்கு அமைதிப்படை என்ற பெயரில் நாச வடிவெடுத்தபோது ஈழத் தமிழர்களின் ஓர்மத்தை - விடுதலைப் போராட்டத்தின் மீதுள்ள அவர்களின் பற்றுறுதியை - சுதந்திர வாழ்வின் மீதான அவர்களின் தாகத்தை - அஹிம்சை வழியில் இந்திய தேசத்துக்கு எடுத்துரைக்க முயன்றவர் தியாகி திலீபன். புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர்.

காந்தீயக் கோட்பாட்டைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு, அந்நிய மண்ணான ஈழத் தமிழர் தாயகத்தைப் பெரும் படையெடுப்போடு ஆக்கிரமித்த இந்திய வல்லாதிக்கத்துக்குத் தனது சாத்வீகப் போராட்டம் மூலம் தியாகி திலீபன் எடுத்துரைத்த செய்தி புரியவேயில்லை.

ஒரு சொட்டுத் தண்ணீர்கூட அருந்தாமல் உண்ணாநோன்பு கடைப்பிடித்து, தமது விடுதலைப் போராட்டத்தின் ஆழத்தை உணர்த்தமுயன்ற தியாகி திலீபனுக்கு மரணத்தைப் பரிசாகக் கொடுத்தது பாரதப் பூமி.

சாத்வீக வழியில் தனது உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்த முயன்ற ஈழத் தமிழர் தாயகத்தின் உணர்வைப் புரிந்துகொள்வதற்கு இந்திய தேசம் மறுத்ததால், அதற்குப் புரியும் மொழியில் அதனை விளங்கவைக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள் புலிகள்.

தியாகி திலீபனைத் தொடர்ந்து, ஆறு மாதம் கழித்து, அவன் சொன்ன அதே செய்தியை இந்திய உபகண்டத்துக்குப் புரியவைப்பதற்கு அதே சாத்வீக வழியை நாடினார் அன்னை பூபதி. விடுதலைப் போராட்டத்தில் ஈழத் தமிழ்ப் போராளிகள் மட்டுமல்லர், ஈழத் தமிழ்ப் பொது மக்கள் ஒவ்வொருவரும் கூட பற்றுறுதியோடும், ஓர்மத்தோடும், தளராத நம்பிக்கையோடும், உணர்வோடும் இருக்கின்றார்கள் என்ற செய்தியை - என்ற உண்மையை - தனது உறுதி தளராது - உண்ணா நோன்பின் மூலம் வயோதிபத் தாய் பூபதி அம்மாள் இந்திய வல்லாதிக்கத்துக்குப் புரியவைக்க முயன்றார்.

நல்லூர் முருகன் ஆலயத்தில் தியாகி திலீபனும், மட்டக்களப்பு, அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் அன்னை பூபதியும் ஆரம்பித்த அறப்போரையும் அவற்றின் தாற்பரியத்தையும் புரிந்துகொள்ள மறுத்த பாரத மகா தேசம் - காந்தீயத் தத்துவத்தின் மகோன்னதத்தை மழுங்கடித்து - அந்த இரண்டு தியாகிகளையும் அவர்களது நியாயமான கோரிக்கைகளையும் புறக்கணித்து அவர்களை விடுதலை வேள்வியில் ஆகுதியாக்கியது.

அந்த வரலாற்றுத் தவறின் பாடத்தை - பிரதிபலனை - அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் இந்திய வல்லாதிக்கம் படிக்கவேண்டியதாயிற்று.

அமைதிப்படை என்ற பெயரில், தான் மேற்கொண்ட ஆக்கிரமிப்பு பெரும் தோல்வியில் முடிய - ஆயிரக்கணக்கான துருப்புகளின் சாவோடும், பல்லாயிரக்கணக்கில் அங்கவீனரான துருப்புகளின் பொறுப்போடும், ஈழத் தமிழ் மக்களின் வெறுப்போடும், அவமானங்களையும் சுமந்தபடி, தமது தாயகத்துக்குத் திரும்பி நடையைக் கட்டவேண்டியவர்களானார்கள் இந்தியப் படையினர்.

ஈழத் தமிழ் மண் மீது இந்தியா மேற்கொண்ட அநீதியான - ஆக்கிரமிப்பு நடவடிக்கையை சகிக்கமுடியாது 'சாது மிரண்டால் காடு கொள்ளாது' என்பது போல் கிளர்ந்தெழுந்த அன்னை பூபதி, தனது உறுதி தளராத அஹிம்சைப் போரின் மூலம் இந்திய தேசத்தின் அத்துமீறலை உலகுக்கு அம்பலப்படுத்தினார்.

இன ஐக்கியத்துக்காகவும், ஒற்றுமைக்காவும், உரிமைக்காகவும் தன்னுயிரை ஈந்தவர் அன்னை பூபதி. அவரின் வழியில் ஐக்கியத்துடனும் ஒற்றுமை உணர்வோடும் உரிமைக்காகவும் இன நல்வாழ்வுக்காகவும் நாம் அனைவரும் ஒன்றுபட்டு உழைக்கத் திடசங்கற்பம் கொள்வதே, ஈழ மண்ணின் அந்த மூத்த தாய்க்கு நமது இனம் செய்யக்கூடிய ஒரே கைமாறாகும்.

# அன்னை பூபதி நினைவு நிகழ்வுக்கு வடமராட்சியில் சிறப்பு ஏற்பாடுகள்

கரவெட்டி.ஏப்.18

தியாகதீபம் அன்னை பூபதியின் 17 ஆம் ஆண்டு நினைவு தின நிகழ்வுகள் வடமராட்சியில் நாளை செவ்வாய்க் கிழமை பெருமெடுப்பில் நடைபெறவிருக்கின்றன.

இந்த நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகளை வடமராட்சிப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை மேற்கொண்டுள்ளது.

அல்வாய் முத்துமாரி அம்மன் ஆலய வீதியில் பேரவைச் செயலாளர் துரை.சத்தியசீலன் தலைமையில் காலை 9.30 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

பொதுச்சுடர் ஏற்றல், தேசியக் கொடி ஏற்றல், ஈகச்சுடர் ஏற்றல், அன்னை பூபதியின் உருவப்படத்திற்கு மலர்மாலை அணிவிப்பு, மலர் வணக்கம், அகவணக்கம் என்பவற்றுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

முன்னதாக வடமராட்சியிலுள்ள விளையாட்டுக் கழகங்கள் அனைத்தும் தமது கழகச் சீருடைகளுடன் தத்தமது இடங்களிலிருந்து அணி வகுத்து மரதன் ஓட்டமாக வந்து விழாப் பந்தலை அடைவர் .

இந்த நிகழ்வில் அனைத்து வர்த்தகச் சங்கங்கள், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், கடற்றொழிலாளர் சங்கங்கள், பொதுமக்கள் , மாணவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வடமராட்சி தேசிய எழுச்சிப் பேரவையினர் கேட்டுள்ளனர்.

பல முக்கிய பிரமுகர்கள் உரையாற்றுவர். பாடசாலை மாணவர்களின் கவிதை, பேச்சு போன்ற நிகழ்வுகளும் இடம்பெறும்.

(கு -70)

# வாகனச் சுத்திகரிப்பு நிலையத்தினால் அத்துளு நன்னீர்த் திட்டத்துக்கு ஆபத்து

கரவெட்டியில் அரசடிச் சந்திக்குச் சமீபமாக அமைக்கப்பட்டுவருகின்ற வாகனச் சுத்திகரிப்பு நிலையத்தினால் கரவெட்டி அத்துளு நன்னீர்த் திட்டத்துக்கு ஆபத்து ஏற்பட்டிருப்பதாகவும் -

எனவே, மேற்படி சுத்திகரிப்பு நிலையத்தை அங்கிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கரவெட்டி மத்தி கிராம அபிவிருத்திச் சங்கமும் அப்பிரதேச சனசமூக நிலையங்களும் யாழ். அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றன.

இது தொடர்பாக அந்த அமைப்புக்கள் அரச அதிபருக்குக் கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளன.

கொடிகாமம் வீதிக்கும் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டிருக்கும் இடத்திற்கும் இடையில் பாரிய வெள்ள வாய்க்கால்கள் கிழக்கு நோக்கிப் பாய்ந்து அத்துளு வயல் வெளியூடாக நீர் வழங்கல் கிணறுள்ள அத்துளு குளத்திற்குச் சென்றடையும்.

வாகனச் சுத்திகரிப்பு நிலையத்தில் வெளிவிடப்படும் கழிவு எண்ணெயும் மாசுப் பொருள்களும் இந்த வாய்க்கால்கள் ஊடாகச் சென்று சுமார் அரைகிலோ மீற்றர் தூரத்திலுள்ள நன்னீர்க் கிணற்றை அடையும். கழிவு நீரை வெளியேறவிடாது ஆழமான குழியில் தேக்கி வைத்தாலும் எண்ணெய்க் கசிவுமாசுப் பொருள்கள் அடி நீர் ஊற்று வழியாக விரைவாக நன்னீர்க் கிணற்றைச் சென்றடையும். இதனால் பல கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்ட நன்னீர்த் திட்டம் பயனற்றுப் போகும் அபாயம் ஏற்பட்டிருக்கின்றது என்று அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

எனவே, மேற்படி நன்னீர்த் திட்டக் கிணற்றிலிருந்து மூன்று கிலோ மீற்றர் சுற்று வட்டத்துக்குள் சுத்திகரிப்பு நிலையங்கள் எதனையும் அமைப்பதற்கு அனுமதி வழங்கக் கூடாது என்றும் அந்தக் கடிதத்தில் கோரப்பட்டிருக்கிறது.

(கு-76)

# அச்சுவேலிக் கடைகளுக்கு இரவு நேரக் காவலாளிகள்

## திருட்டைத் தடுக்க வர்த்தகர் சங்கம் நடவடிக்கை

அச்சுவேலி, ஏப்.18

அச்சுவேலி வர்த்தகர் சங்கத்தின் ஏற்பாட்டில் அப்பகுதி வர்த்தக நிலையங்களை இரவுவேளையில் காவல்செய்வதற்கு 11 இரவுக் காவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அச்சுவேலி பகுதி வர்த்தக நிலையங்களில் அண்மைக்காலத்தில் களவுகள், கடை உடைப்புகள், உடைமைகளைச் சேத மாக்குதல் என்பன இரவுவேளைகளில் நடைபெற்று வருகின்றன.

இரவுவேளையில் வர்த்தக நிலையங்களில் காவல் கடமையை மேற்கொள்வது அவசியம் என்பதைக் கருத்திற்கொண்டு வர்த்தக சங்கம் இரவுக் காவலர்களை நியமித்து அப்பகுதியில் இரவில் திருட்டுக்கள் இடம்பெறாத வகையில் பாதுகாத்து வருகிறது. (கு-11)

# நவீன நீர்ப்பாசன மாதிரிகளை விவசாயிகள் பார்வையிட வசதி

'தூவல் நீர்ப்பாசனம்', 'சொட்டு நீர்ப்பாசனம் மாதிரி அமைப்புக்களை புத்தூர் கமநல சேவை நிலையத்தில் விவசாயிகள் பார்வையிடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

நவீன நீர்ப்பாசனமுறைகளில் முன்னணி வகிக்கும் 'தூவல் நீர்ப்பாசனம்', 'சொட்டுநீர்ப்பாசனம்' என்பன யாழ். குடாநாட்டின் நிலக்கீழ் நீர்வளத்தை பேணக் கூடியதாகவும். குடாநாட்டின் வெப்ப நிலைக்கு ஏற்புடையதாகவும் இருக்கும் என்றும் - இதனால், குடாநாட்டு விவசாயிகள் தமது பயிர்ச் செய்கை நிலங்களில் இந்த முறைகளைப் பயன்படுத்தலாம் என்றும் - சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

புத்தூர் கமநல சேவை நிலையத்தில் உள்ள வாழைத் தோட்டத்தில் சொட்டு நீர்ப்பாசன மாதிரி இணைப்பும் சிறு பயிர்கள் தோட்டத்தில் தூவல் நீர்ப்பாசன இணைப்பும் நிறுவப்பட்டுள்ளதாகவும் - விவசாயிகள் அதனை நேரடியாகப் பார்வையிட்டு தமது விளைநிலங்களில் இணைப்புச் செய்வதற்கான ஆலோசனைகள் மற்றும் உதவிகளைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் புத்தூர் கமநலசேவை நிலையப் பெரும்பாக உத்தியோகத்தர் எஸ்.சத்தியேந்திரன் அறிவித்துள்ளார். (கு-11)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வியை மேம்படுத்த 30 லட்சம் ரூபா நிதி

## குடாநாட்டுக் கல்விச் சமூகம் உதவி

யாழ்ப்பாணம்,ஏப்.18

குடாநாட்டில் சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக முப்பது லட்சம் ரூபா நிதியை கல்விச் சமூகம் வழங்கியுள்ளது.

தமிழீழக் கல்விக்கழகத்தின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் ஆர்வலன் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

வடக்கில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களின் கல்வியை மேம்படுத்துவதற்காக கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் கல்வி மேம்பாட்டு நிதியம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியத்திற்குக் குடாநாட்டுப் பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் திணைக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோர் தாமாகவே முன்வந்து நிதியினை அன்பளிப்புச் செய்துள்ளனர் என்று அவர் தெரிவித்தார். இந்த நிதியினைப் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு வழங்குவதற்காக கல்வி மேம்பாட்டுப் பேரவை மற்றும் பொதுச் சபையில் இருக்கும் உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்படும்.

அந்தக் குழுஉறுப்பினர்கள் மாணவர்களின் தேவைகளை அறிந்து வேலைத் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளனர்.

கட்டம் கட்டமாக மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக இந்த நிதி பயன்படுத்தப்படும் என்று அவர் தெரிவித்தார்.

(கு. 7)

### உதயவாக்கு

வாழ்க்கை என்னும் ஊற்றில் சிரிப்பும் கண்ணீரும் மாறிமாறி வந்துகொண்டேயிருக்கும்.

-தாகூர்

### நாளை

*சித்திரை 06*
*செவ்வாய்க்கிழமை*
*19.04.2005*
*திதி : தசமி*
*பிற்பகல் 01.30 வரை*
*நட்சத்திரம் : மகம்*
*பின்இரவு 04.49 வரை*
*கரிநாள்*
*சுபநேரம் : 10.32 - 12.02*
*ராகுகாலம் : 03.02 - 04.32*
*(யாவும் பழைய நேரப்படி)*

# சிறுவர்களுக்கு விற்றமின் 'ஏ' வழங்குவதற்கு விசேடதிட்டம்

யாழ்ப்பாணம்.ஏப்.18

6 மாதம் தொடக்கம் ஐந்து வயதுக் குட்பட்ட அனைத்துச் சிறுவர்களுக்கும் விற்றமின் 'ஏ' உயிர்ச்சத்து பெரும் அளவில் வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

சுகாதார அமைச்சின் குடும்ப சுகாதாரப் பணியகமும், ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியமும் இணைந்து நடத்தும் இந்த ஒரு நாள் வேலைத்திட்டம், எதிர்வரும் 30 ஆம் திகதி காலை 9 மணிமுதல் பிற்பகல் 3மணிவரை தற்காலிக முகாம்கள் அல்லது சுகாதார வைத்திய அதிகாரியினால் அங்கீகரிக்கப்பட்ட இடங்களில் வைத்து வழங்கப்படவுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களில் உள்ள குழந்தைகளுக்கு விசேட விநியோகமாக மேற்கொள்ளப்படவுள்ளது. இவர்களுக்கு போசாக்கான உணவு கிடைப்பதிலும், விற்றமின் 'ஏ' அதிகமுள்ள உணவுகிடைப்பதிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளமையாலும் இச்சிறுவர்கள் நோய் வாய்ப்பட அதிகவாய்ப்பு இருப்பதனாலும் இந்த விசேட விநியோக நிகழ்ச்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

9 மாதத்தில் ஏற்றப்படும் சின்னமுத்து ஊசியின் போதும் ஒன்றரை வயதில் வழங்கப்படும் போலியோ சொட்டுமருந்து மற்றும் முக்கூட்டு ஊசி மருந்து என்பவற்றின் போதும் 'ஏ' உயிர்ச்சத்துக் குறைவான பிள்ளைகளுக்கு அதனைக் கொடுக்க நடவடிக்கை எடுக்கும்படியும் கோரப்பட்டுள்ளது.

சுனாமி அனர்த்தத்தின்போது குழந்தையின் சுகாதார வளர்ச்சிப் பதிவேடு தொலைந்திருந்தால் விற்றமின் 'ஏ' உயிர்ச்சத்து வழங்கப்படும் தினத்தில் புதியதோர் அட்டையைப் பெற்றுக்கொள்ளுமாறும் மேலதிக விவரங்களுக்குப் பகுதி சுகாதார மருத்துவமாதைச் சந்திக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

(கு-15)

# கர்ப்பிணிகளுக்கான சிகிச்சை நிலையத்தை நாவற்குழியில் மீள ஆரம்பிக்கக் கோரிக்கை

சாவகச்சேரி,ஏப்.18

தென்மராட்சி மேற்குப் பிரதேசமான கைதடி நாவற்குழி தெற்குப் பகுதியில் கர்ப்பிணிகளுக்கான சிகிச்சை நிலையத்தை மீள இயங்கச் செய்யுமாறு அந்தப் பகுதி மக்கள் அரசைக் கோரியுள்ளனர்.

கடந்த 2000 ஆம் ஆண்டு இடப்பெயர்வுக்கு முன் இப்பகுதியில் கர்ப்பிணிகளுக்கான மாதாந்த கிளினிக் சிகிச்சை நிலையம் இயங்கிவந்தது.

ஆனால், மக்கள் மீளக்குடியமர்ந்த பின்னர் இப்பகுதியில் கர்ப்பிணிகளுக்கான இச்சிகிச்சை நிலையம் மீண்டும் ஆரம்பிக்கப்படவில்லை.

இதனால், இந்தப் பகுதியைச் சேர்ந்த கர்ப்பிணித் தாய்மார்கள் கிளினிக்குக்காகப் பலத்த சிரமங்களின் மத்தியில் தூர இடங்களுக்குச் செல்லவேண்டிய நிலையில் அவலப்படுகின்றனர். எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இப்பகுதியில் இச்சிகிச்சை நிலையத்தை மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இப்பகுதி மக்கள் கோரியுள்ளனர். (த-31)


## வாழ்த்துகின்றோம்

2004 டிசெம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த. (சா/த) பரீட்சையில் எமது பாடசாலையில் இருந்து உயர் பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களான ~

செல்வி கோ.கிருஸ்ணப்பிரியா - 9A, 1B
செல்வன தெ.ருபேந்திரா - 7A, 2B, 1C
செல்வி உ.உதயலோஜினி - 6A, 2B, 1C, 1S

ஆகியோரையும் சித்தியடைந்த அனைத்து மாணவர்களையும் வாழ்த்துவதுடன், இவர்களைச் சிறந்த முறையில் வழிநடத்திய அதிபர், ஆசிரியர்களுக்கும் எமது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
பெற்றோர் ஆசிரியர் அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சுவிஸ் கிளை,
யா/இமையாணன் அ.த.க. பாடசாலை

(44343)(46-26-14-45)

## ஓட்டோச் சாரதி தேவை

எமது ஸ்தாபனத்தில் சாரதியாக வேலை செய்வதற்கு ஓட்டோச் சாரதி அனுமதிப்பத்திரம் உடையவரும் அனுபவமுள்ளவரும் உடனடியாகத் தேவை.

தொடர்பு: திட்டமுகாமையாளர்,
புறோ மோட்டோர்ஸ் எஞ்ஜினியரிங் கம்பனி லிமிட்டெட்,
844, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
தொலைபேசி: 021-222-5780 (சி-42349)(46-26-14-45)

World Vision

## பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை

எமது World Vision - அரசசார்பற்ற - நிறுவனத்துக்குப் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் யாழ்ப்பாணத்துக்குத் தேவைப்படுகின்றனர்.

எனவே, பாதுகாப்புச் சேவையில் ஈடுபடுகின்ற நிறுவனங்கள் தமது விண்ணப்பங்களை மாதாந்தச் சம்பள விவரங்களுடன் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

WORLD VISION LANKA
227, 3ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். (44351)(26-14-45)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1965இல் பிறந்த, வவுனியாவில் ஆசிரியையாகக் கடமையாற்றும் பெண்ணுக்கு ஏற்ற மணமகனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

நட்சத்திரம் - ரோகினி, கிரகபாவம் 40
(அரச தொழில் புரிவோர் அல்லது வர்த்தகத்தில் ஈடுபடுவோர் விரும்பப்படுகின்றனர்.)

தொடர்புகளுக்கு: திரு.க.ஜெயவீரசிங்கம (பொறியியலாளர்)
23/10A, மாடாசாமி கோயில் வீதி,
பண்டாரிக்குளம், வவுனியா.
(44326) T.P:.024-2222854, 077-6048906.

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1972 இல் பிறந்த, அரச திணைக்களத்தில் எழுதுவினைஞராகப் பணிபுரியும் பெண்ணுக்கு ஏற்ற மணமகனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

நட்சத்திரம் - திருவோணம் 2ஆம் கால்
கிரகபாவம் - 24
(அரச தொழில் புரிவோர் அல்லது வர்த்தகத்தில் ஈடுபடுவோர் விரும்பப்படுகின்றனர்)

தொடர்பு:. 077-6048906
(44327)

## மருந்து விற்பனையாளர் தேவை

எமது மருந்தகத்துக்கு விற்பனையாளர்கள் தேவை. அனுபவம் உள்ளவர்களும், பழக விருமபுபவர்களும் ஆண், பெண் இருபாலாரும் நேரில் வரவும்.

தங்கவேல் பாமஸி.
No:406, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (44350)


## வாழும் கலைப் பயிற்சி

சாவகச்சேரி,ஏப்.18

இந்து கலாசார அமைச்சின் அனுசரணையுடன் வாழும் கலைப் பயிற்சிநெறி விரிவுரைகளும் செய்முறைகளும் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் தொடக்கி வைக்கப்பட்டன.

இப்பயிற்சி நெறியில் சுமார் 30 பயிற்சியாளர்கள் பங்குபற்றுகின்றனர். நேற்றுமுன்தினம் காலை 7.30 மணிக்கு ஆரம்பமான இப பயிற்சிநெறி, தொடர்ந்து 7 நாள்கள் நடைபெறவுள்ளது. இப்பயிற்சி நெறியைத் தமிழ்நாட்டைச் சேர்நத விரிவுரையாளர் நரசிம்மன் ஆரம்பித்து நடத்தி வருகின்றார்.

இப்பயிற்சி நெறிகள் யாழ்.மத்திய கல்லூரி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் ஆகியவற்றில் நடத்தப்பட்டு வருகின்றன. (த-31)

## கோப்பாய் சாயி நிலைய 15 ஆவது ஆண்டு விழா

கோப்பாய்,ஏப்.18

கோப்பாய் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலைய 15 ஆவது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் 24ஆம் திகதி ஞாயிறுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இங்குள்ள சாயி சமித்தியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரையை அகில இலங்கை சத்திய சாயி சேவா நிறுவன ஆலோசகர் ஸ்ரீ எம். சிவஞானமும் சிறப்புரையை ஸ்ரீ சத்திய சாயி சேவா நிறுவன இணைப்புக்குழு வட பிராந்திய தலைவர் ஆர்.வசந்தசேனனும் நிகழ்த்துவர்.

நாடகம், மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் என்பனவும் இடம் பெறும். (த-72)


## கணக்கீடு

திரு N.சதிஸ்
B.B.A. (F.M.Spi.)
A/L 2007
தனி வியாபார முடிவுக் கணக்கு
ஆரம்பம்
19-04-2005 Tue.
5.00 p.m.
N.S.A. மானிப்பாய் வீதி,
உடுவில்
(44301)

## நான்காம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 04 - 01 - 1936
உதிர்வு 02 - 05 - 2001

திருமதி இராசரத்தினம் பாக்கியம்

திதி 18-04-2005

எமது அன்புத் தெய்வமே! ஆண்டுகள் நான்கு
மறைந்தாலும் உங்கள் நினைவுமட்டும் மறையவே மறையாது!

பிரிவால் துயருறும்:
அன்புக் கணவர்
இராசரத்தினம்.

எழுதுமட்டுவாள் தெற்கு,
எழுதுமட்டுவாள்.

(44275)(46-14-45-26)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 21 - 05 - 1946
மறைவு 11 - 05 - 2003

அமரர் கார்த்திகேசு தர்மலிங்கம்

அன்பு என்ற சொல்லுக்கே இலக்கணமாய் வாழ்ந்து
எம்மையும் அவ்வழியே வளர்த்து ஆளாக்கிய எங்கள் அப்பா!
நீங்கள் இறையடி சேர்ந்து இரண்டு ஆண்டுகள் ஓடி
மறைந்தாலும் உங்கள் அன்பு முகம் மறையாது எம் மனதில்!

ஆண்டா தோட்டம்,
அண்ணா சிலையடி,
கரணவாய்.

- குடும்பத்தினர்.

(44313)(46-14-45-26)

உ
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம!
ஸ்ரீகாமாட்சி அம்பாள் துணை

## 21 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



மண்ணில் 17 - 11 - 1939
விண்ணில் 30 - 03 - 2005

அமரர்
விஸ்வப் பிரம்மஸ்ரீ துரையப்பா சண்முகராஜா
(ஓய்வு பெற்ற சிற்றுயிரியல் ஆய்வாளர், வவுனியா)
(RETIRED REGIONAL ENTOMOLOGICAL ASST., VAVUNIYA)

மாறுகின்ற இவ்வுலகில்
மாறாத அன்புடனும் ஓர்
ஊறு வந்த வேளையிலே
உதவுகின்ற பண்புடனும்
ஆறு செல்லும் வழியெல்லாம்
வளம் காணச் செய்வது போல்
கூறு புகழ் நாச்சிமார் கோயிலடியில்
மும் மொழி பேசும் வித்தகராக ஒளிந்தீரோ!
காற்றோடு வந்த செய்தி கனவெனவே போகாதோ?
கலங்கி வாடுகிறோம் - உங்களைக் கண்ணீரில் தேடுகின்றோம்
உங்கள் புன்சிரிப்பை எப்போது காண்போம் இனி?
துடுப்பற்ற தோணியாய் துடிக்கும் எமைக் கரைசேர்க்க
துரிதமாய்ப் பூவுலகில் மீண்டொருநாள் வாருங்கள்!
எம்மை ஆறாத் துயரில் விட்டுவிட்டுச் சென்றீர்களே!
இறைவனோடு சங்கமித்த உங்களைப் பூமலர் தூவிப்போற்றிடுவோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

எம் குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு உடன் வந்து இரங்கல்கள் தெரிவித்தோருக்கும், மலர்வளையம், கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்கியோருக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியோருக்கும், தொலைத்தந்தி மூலம் துயர்பகிர்ந்தோருக்கும், பல வழிகளிலும் உதவிகள் செய்தோருக்கும் மரணச்சடங்கில் கலந்துகொண்டு எம் ஆழ்துயரில் பங்குகொண்டோர் அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாளை (19.04.2005) செவ்வாய்க்கிழமை அன்னாரின் சகோதரி இல்லத்தில் காலை 10.00 மணிக்கு நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறுகின்ற மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

34, கேசாவில் பிள்ளையார் கோயிலடி,
வண்ணார்பண்ணை வடமேற்கு, யாழ்ப்பாணம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள்.

(44305)(12-46-14-45-26)

## ஓட்டோச் சங்கக் காரியாலயக் கிளை சுன்னாகத்தில் திறந்து வைப்பு



ஓட்டோ உரிமையாளர், சாரதிகள், பயணிகள் நலன்கருதி கிளைக்காரியாலயம் ஒன்று கடந்த 11ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு சுன்னாகம் மத்திய சந்தை முன்பாகத் திறந்துவைக்கப்பட்டது.

சுன்னாகம் கிளைச்சங்கத் தலைவர் இ.மதியழகன் மங்கள விளக்கை ஏற்ற, சுன்னாகம் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.பா.பவநிதன் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். கிளையின் பெயர்ப் பலகையை யாழ். தலைமைச் சங்கத் தலைவா சி.சிவ்ராசா திரைநீக்கம் செய்தார். சுன்னாகம் கிளைச் சங்கச் செயலாளா பி.கஜவர்ணன் வரவேற்புரையை நிகழ்த்தினார்.

*குறிப்பு:* கிளைச் சங்க எல்லைக்குட்பட்ட சகல ஓட்டோக்களையும் சாரதிகள் உட்படப் பதிவுசெய்து கட்டுப்பாடான சேவையாற்றிப் பயன்பெறுமாறு சகல உரிமையாளர்களுக்கும் சாரதிகளுக்கும் அறியத்தரப்படுகிறது.

தலைமைச்சங்கம்,
யாழ்ப்பாணம்.
(சி-42353)(26-14-45)

- நிர்வாகம்.



# பெண்கள் உதைபந்தாட்டம் பொமேர்ஸ் அணி வெற்றி

கரவெட்டி,ஏப்.18

வடமராட்சியில் முதன் முதலாகப் பெண்கள் அணிகள் பங்குபற்றிய உதைபந்தாட்டப் போட்டி ஒன்று இடம்பெற்றது. இந்தப் போட்டியில் வதிரி பொமேர்ஸ் அணி சம்பியனானது.

கரவெட்டிப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் போட்டிகளில் பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி வதிரி பொமேர்ஸ் விளையாட்டு அரங்கில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இந்த ஆட்டத்தில் வதிரி பொமேர்ஸ் வி.க. அணியும் மனோகரா வி.க. அணியும் மோதின.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் தலைவர் மு.வேதாபரணத்துக்கு வீராங்கனைகள் அறிமுகம் செய்துவைக்கப்பட்டனர்.

விறுவிறுப்பாகவும் ரசிகர்களுக்கு பெருவிருந்தாகவும் அமைந்த இந்த ஆட்டத்தில் இரு அணியினரும் கோல்கள் போட முனைந்தனர். இரு அணியினரும் சிறந்த முறையில் தடுத்து விளையாடியதால் கோல்கள் போடும் சந்தர்ப்பங்கள் தவறவிடப்பட்டன.

முதல்பாதி ஆட்டம் முடிவடைய ஐந்து நிமிடம் இருக்கையில் பொமேர்ஸ் அணி வீராங்கனை சுனேகா சுந்திரலிங்கம் மிகவும் லாவகமாக பந்தைத் தட்டிச் சென்று முதலாவது கோலைத் தனது அணிக்குப் பெற்றுக் கொடுத்தார்.

இடைவேளையின் போது 1:0 என்ற கோல் கணக்கில் பொமேர்ஸ் அணி முன்னணியில் இருந்தது.

பின்னர் ஆட்டம் ஆரம்பமாகி, மிகவும் விறுவிறுப்பாக நடந்த போதும் இரு அணியினரும் கோல் எதனையும் போடவில்லை.


பொமேர்ஸ் அணி 1:0 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது.

பெரும் எண்ணிக்கையான ரசிகர்கள் ஆட்டத்தைப் பார்க்க மைதானத்தில் கூடியிருந்தனர்.

இப்போட்டியில் பிரதம நடுவராக தி.வரதராஜனும் உதவி நடுவர்களாக செ.பாஸ்கரன், ச.கதிர காமராஜ் ஆகியோர் பணியாற்றினர்.

கரவெட்டிப் பிரதேச விளையாட்டு அலுவலர் பா.முகுந்தன் போட்டியை ஒழுங்குபடுத்தும் பணியில் ஈடுபட்டிருந்தார்.

(3-70)



### வீரவேங்கை காவேரி நினைவாக

# வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியை அல்வாயில் நடத்துவதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஏப்.18

வீரவேங்கை காவேரி ஞாபகார்த்தமாக எதிர்வரும் 28ஆம் திகதி தொடக்கம் வட அல்வையில் வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி நடத்தப்படவுள்ளது.

வட அல்வை இளங்கோ விளையாட்டுக்கழகத்தினர் இச்சுற்றுப்போட்டியை நடத்த ஏற்பாடுகள் செய்துவருகின்றனர்.

இந்தப் போட்டிகளில் பல்வேறு கழகங்களைச சேர்ந்த அணிகள் மோதவுள்ளன.

எதிர்வரும் 28 ஆம் திகதி தொடக்கம் மூன்று தினங்கள் இந்தப் போட்டிகள் நடைபெறும்.

போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக்கழகங்கள் எதிர்வரும் 20 ஆம் திகதிககு முன்னதாக தமது விண்ணப்பங்களை வட அல்வை இளங்கோ விளையாட்டுக்கழகத்திற்கு அனுப்பி வைக்குமாறு மேற்படி கழகத்தின் தலைவர் பே.நிஸாந்தன் கேட்டுள்ளார். அத்துடன், இந்தப போட்டிகள் யாவும் மின்னொளியில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(3-203-202)

# சுண்டுக்குளி சாள்ஸ் வி.க. 13 ஓட்டங்களால் வெற்றி

யாழ்ப்பாணம்,ஏப்.18

சுண்டுக்குளி விளையாட்டுக் கழகத்துக்கும் சுண்டுக்குளி சாள்ஸ் விளையாட்டுக் கழகத்துககும் இடையில் நடந்த மென்பந்தாட்டப் போட்டியில் சாள்ஸ் வி.க. 13 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

புனித சாள்ஸ் ஆரம்பப்பிரிவு பாடசாலை மைதானத்தில் நடந்த இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சாள்ஸ் விளையாட்டுக் கழக அணியினர் 15 ஓவர்களில சகல விக்கெட்டுக்களையும் இழநது 55 ஓட்டங்களை பெற்றனர்.

நியூட்டன் 20 ஓட்டங்களையும் ரட்சன் 10 ஓட்டங்களையும், தவநேசன் 15 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் சுண்டுக்குளி விளையாட்டுக் கழக வீரர்கள் ரஜிஷ் 3 விக்கெட்டுக்களையும் சூட்டி 3 விக்கெட்டுக்களையும் சிறிகாந்த ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

56 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என களம இறங்கிய சுண்டுக்குளி விளையாட்டுக் கழக அணியினர் 13.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக களையும் இழந்து 42 ஓட்டங்களை மட்டும் பெற்றனர்.

சூட்டி 15 ஓட்டங்களையும் ஜம்றி 10 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர். பந்து வீச்சில் சென். சாள்ஸ் விளையாட்டுக் கழக அணி வீரர்கள் லெனின் 4 விக்கெட்டுக்களையும், ரவி 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

(3-190)

# நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் கலாமன்ற அணி சம்பியன்

யாழ்ப்பாணம்,ஏப்.18

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடைபெற்ற உதைபந்தாட்ட இறுதிப்போட்டியில திருநெல்வேலி கலாமன்ற விளையாட்டுக்கழக அணி சம்பியனானது. யாழ். பொதுவிளையாட்டு மைதானத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெறற இறுதிப்போட்டியில் பொற்பதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கலாமன்றம் விளையாட்டுக்கழக அணிமோதியது.

கலாமன்றம் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனானது.

இப்போட்டியில் சிறந்த வீரனாக கலாமன்றம் விளையாட்டுக்கழக வீரன் எஸ்.ஐங்கரன் தெரிவு செய்யப்பட்டார்.

(3-190-86)

# ஜெட்லைனஸ் வி.க. வெற்றியீட்டியது

யாழ். பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் ஜெட்லைனஸ் விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்றது.

யாழ். பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற போட்டியில் ஜெட்லைனஸ விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து குருநகர் தொடர்மாடி விளையாட்டுக் கழகம் மோதியது.

ஜெட்லைனஸ் விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல்க்கணக்கில் வெற்றிபெற்றது.

(3-190)

# படைப்பிரிவுகள் இடையேயான போட்டியில் 11 ஆவது சிங்கப்பிரிவுக்கு முதலாமிடம்

யாழ்ப்பாணம்,ஏப்.18

யாழ் 51 ஆவது படைப்பிரிவின் அனுசரணையுடன் படைப்பிரிவுகளுக்கு இடையில் நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் கடந்த திங்கட்கிழமை யாழ். பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. போட்டியில் 11 ஆவது சிங்கப்படைப் பிரிவு அணி வெற்றிபெற்றது.

இந்த ஆட்டத்தில், 6 ஆவது காலாட்படைப் பிரிவு அணியை எதிர்த்து 11 ஆவது சிங்கப் படைப்பிரிவு அணி மோதியது.

11 ஆவது சிங்கப்படைப்பிரிவு அணி 2:0 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தினை தனதாக்கிக்கொண்டது.

இப்போட்டியில் தொடரின் சிறந்த ஆட்டக்காரராக 11 ஆவது சிங்கப்படைப் பிரிவைச் சேர்ந்த மோகன்ராஜ் தெரிவுசெய்யப்பட்டு அவருக்கு மவுண்டன் சைக்கிளும் இரண்டாயிரம் ரூபா பணப்பரிசும் வழங்கப்பட்டன.

சிறந்த கோல் காப்பாளராக 6 ஆவது காலாட படைப் பிரிவைச் சேர்ந்த பண்டார தெரிவுசெய்யப்பட்டு பணப்பரிசு வழங்கப்பட்டது.

சிறந்த ஆட்ட நாயகனாக 6 ஆவது காலாட படைப் பிரிவைச் சேர்ந்த சேவியர் தெரிவு செய்யப்பட்டு பணப்பரிசு வழங்கப்பட்டது.

பார்வையாளர்கள் இடையில் நடத்தப்பட்ட சீட்டிழுப்பு போட்டியில் வெற்றிபெற்ற குருநகரை சேர்ந்த றொபின்சன் வின்சலேவுக்கு மின்விசிறி வழங்கப்பட்டது.

இந்த இறுதிப் போட்டிக்கு பிரதம விருந்தினராக யாழ். பத்திரிசியார் கல்லூரியின் அதிபர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் கலந்துகொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களை வழங்கினார்,

(3-190)

# வடமராட்சி கல்வி வலயத்தின் மெய்வன்மைப் போட்டிமுடிவுகள்

வடமராட்சிக் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையில் மெய்வன்மைப் போட்டிகள் நடைபெற்றன. இந்தப் போட்டிகளில் 11வயது, 13வயது, 15வயது ஆகிய பிரிவுகளில் வெற்றி பெற்றோர் விவரம் வருமாறு:-

### 11 வயதுப் பிரிவு

#### ஆண்கள்

**75 மீற்றர்** - சூ.கஸ்ரின் (புலோலி கிழக்கு அ.த.க.பாடசாலை), ர.நிரோஜன் (கரணவாய் தாமோதரா வித்), அ.ஜெயப்பிரியன் (தொண்டைமானாறு வீ.ம.).

**100 மீற்றர்** - சூ.கஸ்ரின் (புலோலி கிழக்கு அ.த.க.பாடசாலை), ர.நிரோஜன் (கரணவாய் தாமோதரா வித்), ஜெ.ஜெயக்குமார் (துன்னாலை தெற்கு அ.த.க.பாடசாலை).

**நீளம் பாய்தல்** - அ.ஜெயப்பிரியன் (தொண்டைமானாறு வீ.ம.), செ.யசிந்தன் (திருஇருதயக் கல்லூரி), பி.பார்த்தீபன் (கரணவாய் மணியகாரன் தோட்ட அ.த.வி.).

**உயரம் பாய்தல்** - யோ.தனுஷன் (தொண்டைமானாறு வீ.ம.), ப.வசிகரன் (அல்வாய் சிறிலங்கா வித்), உ.வர்மன் (கரணவாய் மணியகாரன் தோட்ட அ.த.வி..

#### பெண்கள்

**75 மீற்றர்** - ந.சிவாஞ்ஜனி (ஞானசாரியார் கல்லூரி), து.லக்ஷனா (வல்வை சிவகுரு வித்.), ஆ.சஞ்சியா (கரணவாய் தாமோதரா வித்.),

**100 மீற்றர்** - வே.யோகமயிலினி (வட இந்து மகளிர் கல்லூரி), து.லக்ஷனா (வல்வை சிவகுரு வித்.), ப.சஞ்சிகா (பொலிகண்டி இ.த.க.).

**நீளம்பாய்தல்** - வே.யோகமயிலினி (வட இந்து மகளிர் கல்லூரி), அ.மேரிஜனனி (அல்வாய் வடக்கு றோ.க.), ஆ.சஞ்ஷியா (கரணவாய் தாமோதரா வித்.),

**உயரம் பாய்தல்** - வே.யோகமயிலினி (வட இந்து மகளிர் கல்லூரி), அ.மேரிஜனனி (அல்வாய் வடக்கு றோ.க) ஆ.ஆனந்தப்பிரியா (திருஇருதயக் கல்லூரி).

### 13 வயதுப் பிரிவு

#### ஆண்கள்

**100 மீற்றர்** - செ.ஜெனகன் (ஹாட்லிக் கல்லூரி), யோ.ஜனார்த்தனன் (கம்பர்மலை வித்.), பு.கிருஸ்ணானந்தா (நெல்லியடி ம.ம.வித்.)

**200 மீற்றர்**- ஞா.துஷாந் (ஹாட்லிக் கல்லூரி), அ.அரிகரன் (நெல்லியடி ம.ம.வித்), யோ.ஜனார்த்தனன் (கம்பர்மலை வித்.).

**நீளம் பாய்தல்** - உ.நிஷாந்தன் (அம்பன் அ.மி.த.க.), அ.அரிகரன் (நெல்லியடி ம.ம.வித்), சு.மயூரன் (ஹாட்லிக் கல்லூரி).

**உயரம் பாய்தல்**- வே.துவாரகன் (உடுப்பிட்டி அ.மி.க.), இ.தர்சிகன் (உடுப்பிட்டி அ.மி.க.) பு.தாஷ் மோகன் (கரணவாய் ம.வித்.).

**4X100 அஞ்சல்** - நெல்லியடி ம.ம.வித்., ஹாட்லிக் கல்லூரி, கரணவாய் ம.வித்.

#### பெண்கள்

**100 மீற்றர்**- க.மேரி றெஜிதா (திருஇருதயக் கல்லூரி), அ.மேனகா (வட.இந்து மகளிர் கல்லூரி), உ.உதயநிலா (கம்பர்மலை வித்.).

**200 மீற்றர்**- சி.கௌரி (வட மத்திய மகளிர் கல்லூரி), அ.மேனகா (வட இந்து மகளிர் கல்லூரி), நா.கிருஷாந்தி (தொண்டைமானாறு வீ.ம.வி.).

**நீளம் பாய்தல்**- ம.மாதுளானி (வல்வை சிவகுரு வித்), ஆ.உஷாந்தினி (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), வ.சிவப்பிரியா (வட மத்திய மகளிர் கல்லூரி).

**உயரம் பாய்தல்**- ர.சகானா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), அ.சாரங்கா (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), சு.வாகினி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி),

**4X100 அஞ்சல்**- மெதடிஸ்த பெண்கள் உயா தரப் பாடசாலை, வட இந்து மகளிர் கல்லூரி கரணவாய் ம.வித்.

### 15 வயதுப் பிரிவு

#### ஆண்கள்

**100 மீற்றர்**- த.சசிலன் (ஞானசாரியர் கல்லூரி), மோ.கஜனராஜ் (விக்னேஸ்வராக் கல்லூரி), க.அனோஜன் (நெல்லியடி ம.ம.வித்.).

**200 மீற்றர்**- த.சசிலன் (ஞானசாரியர் கல்லூரி), அ.ஜெயகிருஷ்ணா (விக்னேஸ்வரா கல்லூரி), மோ.கஜனராஜ் (நெல்லியடி ம.ம.வித்.)

**400 மீற்றர்**- சு.கஜமுகானந்தன் (உடுப்பிட்டி அ.மி.க.), தே.நிதர்ஸன் (நெல்லியடி ம.ம.வித்.), சு.ஆரணியன் (நெல்லியடி ம.ம.வித்.).

**நீளம் பாய்தல்** - த.சகிலன் (ஞானசாரியார் கல்லூரி), மோ.கஜனராஜ் (விக்னேஸ்வராக் கல்லூரி), இ.இளந்தாரன் (கொற்றாவத்தை அ.மி.த.க.).

**உயரம்பாய்தல்**- செ.நிதர்சன் (உடுப்பிட்டி அ.மி.க.), சி.நிறோஸ்குமார் (பொலிகண்டி இ.த.க), கு.குகரதன் (கம்பர்மலை வித்.).

**குண்டெறிதல்**- வ.ஹரிகரன் (ஹாட்லிக் கல்லூரி), தி.மனோராஜ் (ஹாட்லிக் கல்லூரி), சு.கஜமுகானந்தன் (உடுப்பிட்டி அ.மி.க.).

**தட்டெறிதல்**- வ.ஹரிகரன் (ஹாட்லிக் கல்லூரி), சி.நிரோஸ்குமார் (பொலிகண்டி இ.த.க.), சி.சஜந்தன் (அம்பன் அ.த.க.).

**ஈட்டி எறிதல்**- ஜெ.சிந்துஜன் (ஹாட்லிக் கல்லூரி), சோ.துஷாந் (நெல்லியடி ம.ம.வித்), க.புனிதராஜ் (கொற்றாவத்தை அ.மி.த.க.).

**4X100 அஞ்சல்**- ஹாட்லிக் கல்லூரி, விக்னேஸ்வராக் கல்லூரி, உடுப்பிட்டி அ.மி.க.

**4X400 அஞ்சல்**- உடுப்பிட்டி அ.மி.க, ஹாட்லிக் கல்லூரி, விக்னேஸ்வராக் கல்லூரி.

#### பெண்கள்

**100 மீற்றர்**- சு.பகீரதி (மெதடிஸ்த பெ.உ. பாடசாலை), யோ.தீபிகா (வடஇந்து மகளிர் கல்லூரி), கு.துசிதா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

**200 மீற்றர்**- ஸ்ரீ.புவிதா (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), யோ.தீபிகா (வட இந்து மகளிர் கல்லூரி), து.துசாளினி (வடமராட்சி ம.ம.கல்லூரி).

**நீளம் பாய்தல்**- யோ.தீபிகா (வட இந்து மகளிர் கல்லூரி), சு.பகீரதி (மெதடிஸ்த பெ.உ. பாடசாலை), இ. யோய்ஸ் பிறின்சினி (மணற்காடு றோ.க.),

**உயரம் பாய்தல்**- த.சுகன்யா (சிதம்பராக் கல்லூரி), பெ.கலைவாணி (வல்லை மகளிர் ம.வித்.), இ.யோய்ஸ் பிறின்சினி (மணற்காடு றோ.க.).

**குண்டெறிதல்**- செ.மோகனா (விக்னேஸ்வரா கல்லூரி), த.தர்சினி (சிதம்பராக் கல்லூரி), உ.உதயரூபினி (இமையாணன் அ.த.க).

**தட்டெறிதல்**- ச.பகீரதி (வடஇந்து மகளிர் கல்லூரி), சி.பவிதா (நெல்லியடி ம.ம.வித்.), பா.சுகன்யா (வடஇந்து மகளிர் கல்லூரி),

**ஈட்டி எறிதல்**- ஜோ.அன்பரசி (மெதடிஸ்த பெ.உ.பாடசாலை), த.தர்மினி (சிதம்பராக் கல்லூரி), சோ.நேளியா (நெல்லியடி ம.ம.வித்.).

**4X100 அஞ்சல்**- மெதடிஸ்த பெண்கள் உயர் தர பாடசாலை, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, வடஇந்து மகளிர் கல்லூரி. (3-70-203)

*(வளரும்)*

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## காணி விற்பனைக்கு

கொடிகாமத்தில், கண்டி வீதியில் இருந்து 250 யார் தூரத்திலும் கச்சாய் வீதியாலும் போகக்கூடிய மின்சார வசதியும் தென்னை வரும்படியும் உள்ள 50 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: V.N.சோமசுந்தரம் இல.393/17, கோயில் வீதி, நல்லூர். T.P.:021 222 6461 (44293)

காங்கேசன்துறை வீதி, தாவடி, கொக்குவிலில் கிணற்றுடனும் சுற்றுமதிலுடனும் கூடிய 11 பரப்புக்காணி (இரண்டு பக்கமும் வீதிகளைக் கொண்டது), கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு அருகில் (காளிகோயிலடி), 3 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 0779059840.(44211)

சுன்னாகம், சூராவத்தை முத்துமாரி அம்மன் கோயிலுக்கு அருகில் வீடு கட்டக்கூடிய (4 பரப்பு 2 குளி) சதுரக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: K.சுபாகரன், வைரவர் கோயில் வீதி, மானிப்பாய். T.P.: 0777570221(44305)

## வான் விற்பனைக்கு

60.... தொடர் இலக்கம் கொண்ட ஹைஏஸ் வான் மொடல் LH41 (பாடசாலைச் சேவைக்கு உகந்த வான்) விற்பனைக்குண்டு. தொடர்பு: N.குகேந்திரன் (மெக்கானிக்), 6, சென் ஆன்ஸ் லேன், பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம். (44330)

## மானிப்பாய் மெமோறியல் முகாமைத்துவக் குழு அமைப்பு

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் 2005 ஆம் ஆண்டுக்கான முகாமைத்துவக் குழு அமைக்கப்பட்டுள்ளது. பாடசாலை அதிபர் இணை அதிபர் உட்பட 11 பேர் கொண்டதாக இக்குழு அமைக்கப்பட்டது. (த-185)

## கப்பூது வீதியை திருத்துவதற்கு நிதி

கப்பூது கரணவாய் வீதியைப் புனரமைப்பதற்கென புனர்வாழ்வு புனரமைப்புத் திணைக்களம் 20மில்லியன் ரூபா நிதியினை ஒதுக்கியுள்ளது.

இவ்வீதியின் திருத்தவேலைகளை மேற்கொள்ள முதற்கட்டமாக 5மில்லியன் ரூபா நிதி கரவெட்டிப் பிரதேச செயலகத்தினூடக வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி வீதி நீண்டகாலமாகச் சேதமடைந்து காணப்படுவதால் மக்கள் போக்குவரத்தில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

தற்போது இவ்வீதி திருத்தப்படவுள்ளதால் போக்குவரத்து சிரமம் குறைக்கப்படும் என மக்கள் தெரிவித்தனர். (த-70-204)

## தவறிவிட்டது

புத்தூர் மேற்கு, கலைமதி வீதி, புத்தூரைச் சேர்ந்த மாணிக்கன் சுகந்தினி என்பவரது தேசிய அடையாள அட்டையும் இராணுவ அடையாள அட்டையும் (0903006449) மற்றும் பணமும் கொண்ட மணிப்பேர்ஸ் 13-04-2005 புதன்கிழமை யாழ்நகரப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். (44340)

கவிதா நித்தியானந்தன் என்பவருடைய சாரதி அனுமதிப்பத்திரமும் வேறு சில முக்கிய ஆவணங்களும் 12-04-2005 அன்று சட்டநாதர் சிவன்கோயில் வீதிக்கும் திருநெல்வேலிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இல.49, வளாக வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (44352)

லோட்டன் வீதி, மானிப்பாயைச் சேர்ந்த தேவதாசன் கணிதபூஷணி என்பவரின் தேசிய அடையாள அட்டை (இல.538303143 x), விசேட அடையாள அட்டை (0905004590) என்பன கடந்த 23-02-2005 புதன்கிழமை மானிப்பாய்க்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியில் ஒப்படைத்துதவவும். (44346)

## வான் வாடகைக்குத் தேவை

தனியார் நிறுவனம் ஒன்றில் கடமையாற்றும் உத்தியோகத்தர் ஒருவருக்கு மாதாந்த வாடகை அடிப்படையில் ஒரு வருடத்திற்கு Town ACE (New Model) வான் தேவை. தொடர்புகளுக்கு: 077 3126452 (44369)

## இமயம் நாடக நூல்

மாணவர்கள் படிப்பதற்கும், நடிப்பதற்கும் பொருத்தமான 11 நவீன நாடக நூல்களும் நவீன நாடகம் பற்றிய பல கட்டுரைகளும் கொண்ட ஒரேயொரு நூல் 400 நாடகங்கள் எழுதிய அராலியூர் சுந்தரம்பிள்ளை எழுதியது. (44319)

## கோழிக்குஞ்சு விநியோகம்

நம்பர் - 1, பகிரா, பிறிமா, புறொயிலர் குஞ்சுகளும் Prima சிவப்பு, வெள்ளைப் பேட்டுக்குஞ்சுகளும் 20-04-2005 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும். தொடர்புகளுக்கு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. தாரகை, முதலாம் கட்டை, பருத்தித்துறை. றஞ்சித், 517, ஸ்ரான்லி வீதி. மதுரா, 221, ஆஸ்பத்திரி வீதி. ஹரிஸ் ஸ்ரோர்ஸ், பிரதேச சபைக் கட்டடத் தொகுதி, வழக்கம்பரை. தொல்புரம். P.ரவி, சாவகச்சேரி. (44264)

## வீதி சேதம்

கோப்பாய் - மானிப்பாய் வீதி அண்மையில் பெய்த மழையினால் மோசமாகப் பாதிப்படைந்துள்ளது.

இதனால் இவ்வீதியால் சென்றுவரும் விவசாயிகள் நோயாளிகள், மாணவர்கள் பெரும் பாதிப்பை எதிர்நோக்குகின்றனர் எனச் சுட்டிககாட்டப்பட்டுள்ளது. இவ்வீதி கடந்த ஜனவரி மாதம் செப்பனிடப்பட்டு திருத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-72)

## இலவச வகுப்புகள்

கோப்பாய் சாயி சமிர்த்தியால் வசதி குறைந்த மாணவர்களுக்காக இலவச ஆங்கில வகுப்பு தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் வகுப்பு என்பன நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த வகுப்புகளில் எழுபதுக்கு மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு பயன்பெற்று வருகின்றனர். (த-72)

## தண்ணீர்த் தாங்கி அன்பளிப்பு

'நிக்கொட்' திட்டத்தின் கீழ் வலி. தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை திட்டமிடற் பிரிவுக்கு தண்ணீர்த் தாங்கி வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் 6ஆம் திகதிக்கு முன்னர் இதனைப் பெற்றுகொள்ளுமாறு 'நிக்கொட்' யாழ்.மாவட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் க.நவரத்தினராசா மானிப்பாய் பிரதேச சபை செயலாளரைக் கடிதமூலம் கேட்டுள்ளார். (த-185)

## உள்ளத்தின் ஆழத்தில் நின்றெழும் நன்றிகள்

26.12.2004 இல் ஏற்பட்ட கடற்பேரலைத் தாக்கத்தால் நிலைதடுமாறி நின்றவேளை எம் தேவையறிந்து சேவை செய்த பருத்திநகர் இளைஞர்களுக்கும் அவர்களின் பக்கவேர்களாய் நின்று பணிசெய்த யாவருக்கும் எம் உளமார்ந்த நன்றிகள்.

"வாழ்க உங்கள் சேவை மனம"

முனை.க.கூ. சங்கம்
பருத்தித்துறை.

(44365) (39-16-18-24)

## கலைப்பயணத்தில் புதியதொரு பிரவேசம்

## கானம்ஸ் இசைக்குழு

யாழ். நகரின் முன்னணிக் கலைஞர்கள், திவாகர், வரதனுடன் சிறந்த இளங்கலைஞர்களும் இணைந்து புதியதோர் இசைக்குழு உதயமாகின்றது.



தொடர்புகளுக்கு:

"விசுவல் ரெக்"
ஸ்ரேசன் றோட், சுன்னாகம்.
தொலைபேசி: 0773114323

S.T.நந்தீஸ் (அறிவிப்பாளர்)
உடுப்பிட்டிச் சந்தி, உடுப்பிட்டி.
தொலைபேசி: 0602212368

(44367) (24-16-18)

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை வைரவன்

நாவற்குழி கிழக்கு, தச்சன்தோப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை வைரவன் 15-04-2005 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - தெய்வானை ஆகியோரின் அன்பு மகனும் அம்மா அவர்களின் அன்புக் கணவரும் கிருஸ்ணன், காலஞ்சென்ற செல்லையா ஆகியோரின் அன்புச் சகோதரனும் வீரசிங்கம், சிந்தாமணி, பாலச்சந்திரன், குணமணி, சரவணமுத்து, இராமச்சந்திரன், பரிபூரணச்சந்திரன், ஞானச்சந்திரன் (சுவிஸ்), காலஞ்சென்ற ரவிச்சந்திரன், பிறேமச்சந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற மருதநாயகி (இராசம்மா) அவர்களின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18-04-2005) திங்கட்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிணமுருங்கை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*நாவற்குழி கிழக்கு, தச்சன்தோப்பு.* (44364)(24-16-18)

தகவல்: மனைவி, பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்



### திருமதி உதயராஜ் குமுதினி செல்வி உதயராஜ் சபினா

வேலணை மேற்கைச் சேர்ந்தவர்களும் சுவிற்ஸர்லாந்தைத் தமது வசிப்பிடமாகக் கொண்டவர்களுமான திருமதி உதயராஜ் குமுதினி, செல்வி உதயராஜ் சபினா ஆகிய இருவரும் 12-04-2005 செவ்வாய்க்கிழமை சுவிற்ஸர்லாந்தில் அகால மரணமானார்கள்.

அன்னார்கள் வேலணை மேற்கு, 7ஆம் வட்டாரத்தைச் (மண்கும்பான்) சேர்ந்த பன்னீர்ச்செல்வம் - சரோசா தம்பதிகளின் அன்பு மகளும் அருமைப் பேர்த்தியும் கொட்டடி, யாழ்ப்பாணம் துரைராசா தம்பதியினரின் மருமகளும் பேர்த்தியும் சகுந்தலா, சதீஸ்குமார், விஜயகுமார் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் மருமகளும் சாந்தலிங்கம் அமிர்தவல்லியின் அருமைப் பேர்த்தியும் பூட்டியுமாவார்கள்.

இவர்களின் இறுதிக்கிரியைகள் இன்று (18-04-2005) திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு சுவிற்ஸர்லாந்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**பா.ஸ்ரீதர்**
*68/4, பரணன் கொமினிக்கேசன் ஒழுங்கை, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம்.* (24-14-45)

தகவல்:
அப்பா பன்னீர்ச்செல்வம் குடும்பத்தினர்,
அண்ணா சதீஸ்குமார் குடும்பத்தினர்.


UNIT

இந்தியாவில் கணனிப் பொறியியல் துறைப் பட்டம் பெற்றவர்களும், இந்தியாவில் இரண்டு தசாப்த காலமாக கணனியில் பல்வேறு துறைகளில் பணிபுரிந்து அனுபவம் பெற்று பெயரெடுத்தவர்களாகிய நாங்கள் தாயக மண்ணில் அதியுயர் தொழில் நுட்பத்தை வழங்கி வருகின்றோம். கணனித் துறையில் எமது அனுபவம் மற்றும் தனித்தன்மையும் கொண்டு முதல் படியாக சகல கணனி உதிரிப் பாகங்களையும் உற்பத்தியாளர்களிடமே நேரடியாக இறக்குமதி செய்து குறைந்த விலைக்கேயுரிய சேவையுடன் இலங்கையில் எங்கும் இல்லாதவாறு 3வருட முழு உத்தரவாதத்துடன் வழங்குகின்றோம்.

கொழும்பு விலையில் — 3 வருட முழு உத்தரவாதம்

எமது சேவைகள் பல அவற்றுள் சில :

விற்பனை
- உலகத்தரம் வாய்ந்த பிரத்தியேக உதிரிப்பாகங்களை தெரிவு செய்து இணைத்து முழுக் கணனியாகவும் மற்றும் உதிரிகளாகவும் வழங்குதல்.
- கணனி தயாரிப்பில் முன்னணி நிறுவனங்களான Compaq, DELL, IBM மற்றும் HP நிறுவனங்களில் தயாரிப்புக்களை மிகமிகக் குறைந்த விலையில் தரம் மாறாமல் வழங்குதல்
- உலகத்தரம் மற்றும் முன்னணி தயாரிப்பு நிறுவனங்களான Perx & Asrock தயாரிப்புக்களின் ஏக விநியோகம்
- வலைப்பின்னலமைப்பில் முன்னணி நிறுவனமான Cisco தயாரிப்புகள் மற்றும் சேவைகளை மிகமிகக் குறைந்த விலையில் வழங்குதல்

New Year Offer
நாங்கள் வழங்கும் ஒவ்வொரு கணனியுடனும்
Inkjet Printer/2400 DPI Scanner/ Computer Table/600VA UPS
மற்றும் Screen Filter, Mouse pad & Dust Cover Totally Free

Hybrid Boost, Hypher Thread, Dual Monitor வசதிகளுடன்

புதிய Multimedia Pentium IV கணனிகள்
மூன்று வருட உதிரிப்பாக உத்தரவாதத்துடன் கூடிய விற்பனைக்குப் பிந்திய சேவைகள்

An Indian Engineer's Centre

We are entirely different from others

நிபந்தனைக்குட்பட்டது. இச்சலுகை சில தினங்கள் மட்டுமே

Universal Network of Information Technology
347, K.K.S. Road, Manohara Theatre Junction,
Jaffna, Sri Lanka.

# சுற்றுலாப் பயணிகளைக்கவரும் வகையில் சுண்டிக்குளத்தில் பறவைகள் சரணாலயம்

## கிளிநொச்சி அரச அதிபர் தகவல்

பரந்தன்,ஏப்.18

கிளிநொச்சி மாவட்ட சுண்டிக்குளம் பகுதியில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையிலான பறவைகள் சரணாலயம் ஒன்று அமைக்கப்படவிருக்கிறது.

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் இந்த தகவலைத் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் சுண்டிக்குளம் பகுதி பறவைகள் சரணாலயம் அமைப்பதற்கு ஏற்ற சிறந்த இடம் என்றும் -

அங்கு சுற்றுலாப் பயணிகளைக் கவருகின்ற வகையில் பிரமாண்டமானதொரு பறவைகள் சரணாலயத்தை அமைப்பதற்கு முடிவுசெய்யப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அண்மையில் இந்த இடத்தில் சரணாலயம் அமைப்பதற்கான சாத்தியப்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக பல ஆய்வாளர்கள் வந்து திரும்பியிருக்கின்றனர்.

அவர்களின் ஆய்வறிக்கை வந்தவுடன் இது தொடர்பான ஏனைய முடிவுகள் எடுக்கப்படும் என்றார் அரச அதிபர். இதேவேளை -

மேற்படி சுண்டிக்குளம் பகுதியில் விலங்குகள் சரணாலயம் அமைப்பதற்கு ஏற்ற சூழலில்லை எனவும் அவர் தெரிவித்தார். (த-352)

# விளையாட்டு உத்தியோகத்தர் தாக்கப்பட்டார்

விளையாட்டு உத்தியோகத்தர் ஒருவர் விளையாட்டு மைதானத்தில் வைத்து தாக்கப்பட்ட சம்பவம் குமரபுரம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கடந்த 13 ஆம் திகதி மாலை கண்டாவளைப் பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் குமரபுரம் மைதானத்தில் நடைபெற்றன.

இதன்போது ஏற்பட்ட முரண்பாட்டினால் விளையாட்டுக் கழக உறுப்பினர்கள் நால்வர் விளையாட்டு உத்தியோகத்தர் ப.ஆனந்தராஜ் என்பவரைத் தாக்கியுள்ளனர்.

இதுதொடர்பாக சம்பந்தப்பட்டவர்களை கிளிநொச்சி காவல்துறையினர் விசாரணை செய்துவருகின்றனர். (த-301)

# சுனாமி பாதித்த மாணவருக்கு வங்கிக் கணக்குப் புத்தகங்கள்

முல்லைத்தீவு,ஏப்.18

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்ட சிறுவர்களுக்கு முல்லை. மாவட்ட கூட்டுறவுச் சங்க சமாசம் தலா 10 ஆயிரம் ரூபாவை வைப்பிலிட்டு வங்கிக் கணக்குப் புத்தகங்களை வழங்கிவருகின்றது.

தாய், தந்தையை இழந்த சிறுவர்கள் இனங்காணப்பட்டு இவை வழங்கப்பட்டு வருகின்றன.

நெதர்லாந்து தமிழ் மையத்தினூடாக சி.இந்திரன், அ.பாஸ்கரன் மற்றும் அவர்களின் நண்பர்கள் ஆகியோர் இணைந்து வழங்கிய நிதியைப் பயன்படுத்தி 63 சிறுவர்களுக்கு வங்கிக் கணக்குப் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க வளாகத்தில் வைத்து இந்தக் கணக்குப் புத்தகங்கள் வழங்கப்படுவதாக சமாசத்தலைவர் அ.மரியதாஸ் தெரிவித்தார். (எ)

# கற்சிலைமடுச் சந்தைப்பகுதியில் மலசலகூட வசதிகள் இல்லை

## இதனால் அங்கு சுகாதாரச் சீர்கேடு

கற்சிலைமடு பிரதான சந்தியில் மலசலகூட வசதிகள் இல்லாமையால் அப்பகுதியில் சுகாதாரச் சீர்கேடு நிலவுவதாக அப்பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மேற்படி சந்தியில் வர்த்தக நிலையங்கள், கூட்டுறவுக்கடை, மருத்துவமனை, பொதுச்சந்தை என்பன அமைந்துள்ளன.

இந்த நிலையில் அங்கு மலசலகூடம் எதுவும் இல்லாமையால் பொதுமக்கள் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். அப்பகுதி சுகாதாரத்திற்கும் பங்கம் ஏற்பட்டுள்ளது.

ஒட்டுசுட்டான் பிரதேசசபை இயங்கிவரும் வளாகத்தினுள் பொது மலசலகூடம் ஒன்று அமைக்கப்பட்ட வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோதும் இதுவரையில் அதற்கான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

எனவே, உரியவர்கள் இதனைக் கவனத்தில் எடுத்து இப்பகுதியில் சுகாதாரத்தைப் பேண ஆவன செய்யவேண்டும் என்று மக்கள் கேட்டுள்ளனர். (த- 341- 203)


# மூலிகை உற்பத்தியாளரை இணைத்து சங்கம் அமைப்பதற்கு நடவடிக்கை

கிளிநொச்சி,ஏப்.18

கிளிநொச்சி மாவட்ட சித்த வைத்திய சேவைகள் இணையம் எதிர்வரும் வியாழக்கிழமை கிளிநொச்சியிலுள்ள மூலிகை உற்பத்தியாளர்களை இணைத்து சங்கம் ஒன்றை அங்குராப்பணம் செய்ய ஏற்பாடுகளை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்காக மாவட்டத்தில் உள்ள அனைத்து சுதேச ஆயுள்வேத வைத்தியர்களையும் எதிர்வரும் 21 ஆம் திகதி காலை 10 மணிக்கு மாவட்ட நிர்வாகசேவை செயலகத்திற்கு சமுகம் தந்து சுதேச வைத்தியத்துறை விருத்திக்கு ஒத்துழைக்குமாறு வைத்திய கலாநிதி விக்ரமன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (த-301)




புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பொங்கல் திருவிழா கடந்த மாதம் 25 ஆம் திகதி நடைபெற்றது. அதன்போது நேர்த்திகள் வைத்த பக்தர்கள், ஆயிரக்கணக்கான கோழிகளை ஆலயத் திற்குக் கொண்டுசென்று தானமாகக் கொடுத்தனர். அவ்வாறு கோழிகளை பக்தர்கள் ஒப்படைப் பதையும் - அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட கோழிகள் ஏலத்தில் விற்கப்படுவதையும் படங்களில் காணலாம். *(படங்கள்: பரந்தன் செய்தியாளர்)*

# பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் கிளிநொச்சிக்கு 15லட்சம் ரூபா

## பத்மினி எம்.பி.தகவல்

பரந்தன்,ஏப்.18

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள முன்பள்ளிகளை அபிவிருத்தி செய்யவும் பெண்கள் மேம்பாடு, விளையாட்டுத்துறை வளர்ச்சி போன்றவற்றுக்கும் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்டத்தின் கீழ் 15லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர்மேலும் தெரிவிக்கையில்:-

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரின் பொறுப்பிலேயே இதற்கான அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

தற்போது ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் முன்பள்ளிகளை அபிவிருத்தி செய்தல், விளையாட்டுத் துறையை வளர்த்தல் என்பவற்றுடன் முக்கியமாக பெண்களின் ஆளுமைவிருத்திக்கும் செலவிடப்படவிருக்கிறது.

இந்த அடிப்படையில் பெண்கள் மேம்பாடு, சிறுவர்களுக்கான முன்பள்ளிகள் அமைத்தல், நீர்விநியோகம் போன்ற அத்தியாவசிய தேவைகளை அரச அதிபர் இனங்கண்டு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

அதன் அடிப்படையிலேயே அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-352-203)

# இடைத்தங்கல் முகாம்களில் மழையால் மக்கள் பாதிப்பு

புதுக்குடியிப்பு,ஏப்.18

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு இடைத்தங்கல் முகாம்களில் வசித்து வரும் மக்கள் தற்போது பெய்து வரும் பருவ மழையால் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இடைத்தங்கல் முகாம் குடிசைகள் சிலவற்றில் ஒழுக்குகள் ஏற்பட்டுள்ளது. சில குடிசைகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளது.

இந்த மழையினால் இங்கு தங்கியுள்ள முதியவர்கள், சிறுவர்கள் பெரும் அசௌகரியங்களைச் சந்தித்து வருகின்றனர்.

இதேவேளை - இங்கு பல்வேறு தொற்றுநோய்களும் ஏற்பட்டிருக்கின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (த-353-204)

# தொடர்மழையால் கிளிநொச்சியில் சிறுபோக நெற்செய்கை தாமதம்

புதுக்குடியிருப்பு,ஏப்.18

கிளிநொச்சி மாவட்டத்தில் பெய்துவரும் தொடர் மழை காரணமாக இவ்வருடச் சிறுபோக நெல் உற்பத்தி தாமதமடைகின்றது.

இந்த வருடம் பங்குனி மாதத்தில் சிறுபோக உற்பத்தி மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தபோது பங்குனி மாத இறுதிப் பகுதியில் பெய்த தொடர் மழை காரணமாக விவசாயிகள் நிலத்தைப் பண்படுத்த முடியாது நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றார்கள்.

இதேவேளை, கடந்த பெரும் போகத்தில் உற்பத்தி செய்யப்பட்ட நெல்லைச் சந்தைப் படுத்த முடியாததால் சிறுபோக நெல் உற்பத்திக்குப் பணம் இல்லாமல் விவசாயிகள் சிரமப்படுகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (த-352)

# விசுவமடு தபாலகத்தில் ஊழியர் பற்றாக்குறை

பரந்தன்,ஏப்.18

விசுவமடு தபாலகத்தில் தபால் ஊழியர் பற்றாக்குறை நிலவுகின்றது. இதனால், அபபகுதி மக்களுக்குத் தபால் சேவைகள் சீராகக் கிடைப்பதில்லை என்று விசனம் தெரிவிக்கப்படுகிறது.

விசுவமடு தபாலகத்தின் தபால் விநியோக எல்லைக்குட்பட்ட பகுதி மக்களுக்கு உரிய நேரத்திற்கு கடிதங்கள் கிடைப்பதில்லை.

இதனால், அவர்கள் தமக்குரிய கடமைகளை உரியநேரத்தில் மேற்கொள்ள முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

மேற்படி தபாலகம் ஆரம்பித்த காலத்தில் இருந்து இரண்டு தபால் ஊழியர்கள் மட்டுமே அங்கு கடமைபுரிந்து வந்தனர். அவர்களில் ஒருவர் ஓய்வு பெற்றுச் சென்றுவிட்டார்.

தற்போது ஒருவர் மட்டுமே தபால் விநியோக வேலைகளையும் தபால் சேகரிப்பு வேலைகளையும் மேற்கொண்டு வருகின்றார்.

சுமார் 20 மைல் சுற்றளவிலுள்ள தருமபுரம், தேராவில், மயில்வாகனபுரம் ஆகிய பகுதிகளில் இவர் கடமைபுரிந்து வருகின்றார்.

இதன் காரணமாகவே தாமதமாகத் தபால் விநியோகமும் தந்தி விநியோகமும் நடைபெற்று வருவதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட தபால் அத்தியட்சகர் இதில் கவனமெடுத்து மேற்படி தபாலகத்திற்குத் தேவையான ஊழியர்களை நியமனம் செய்து தபால் விநியோகத்தைச் சீசெய்ய வேண்டுமென்று மக்கள் கோரியுள்ளனர். (த-352-203)

# பாதிக்கப்பட்ட மாணவர்கள் சீருடை தைப்பதற்கு நிதியுதவி

## 'யுனிசெவ்' அமைப்பு வழங்கியது

புதுக்குடியிருப்பு,ஏப்.18

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவுப் பாடசாலை மாணவர்களின் சீருடைகள் தைப்பதற்குச் செலவாகும் நிதியினை 'யுனிசெவ்' நிறுவனம் வழங்கியுள்ளது.

இந்த நிதியினைக் கையளிக்கும் நிகழ்வு கடந்த 12 ஆம் திகதி வலயக் கல்விப் பணிமனையில் நடைபெற்றது.

'யுனிசெவ்' நிறுவனத்தைச் சேர்ந்த வா.வளவன், பாடசாலை அதிபர்களூடாக தையல்காரர்களிடம் பணத்தினைக் கையளித்தார்.

இதேவேளை - 'யுனிசெவ்' நிறுவனத்தால் மாணவர்களுக்கு ஏற்கனவே, சீருடைத் துணிகள் வழங்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். (த-353-204)

# சீரற்ற தொலைபேசிகளுக்கு விரைவில் தீர்வு; தொந்தரவு அழைப்புகளுக்கும் முடிவு கிட்டும்

## 'ரெலிக்கொம்' வடபிராந்திய பிரதிப் பொதுமுகாமையாளர் உதயனுக்குச் செவ்வி

குடாநாட்டில் 'ரெலிக்கொம்' நிறுவனத்தின் தொலைபேசி இணைப்புக்களில் ஏற்படும் சீரற்ற தன்மைகளுக்கு விரைவில் உரிய தீர்வு கிடைக்கும்.

இப்போதிருக்கின்ற பழைய பரிவர்த்தனை நிலையத்துக்குப் பதிலாக நவீன பரிவர்த்தனை நிலையம் ஒன்றை நிறுவுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

இந்த நவீன பரிவர்த்தனை நிலையம் நிறுவப்பட்டதன் பின்னர் குடாநாட்டில் 'ரெலிக்கொம்' இணைப்புகளில் சீரற்ற - தெளிவற்ற - தன்மைகள் இருக்காது.

அத்துடன், மறுமுனை அழைப்பாளர்களின் இலக்கத்தைத் தெரிந்துகொள்ளக்கூடிய வசதியும் (சீ.எல்.ஏ.) குடாநாட்டுப் பாவனையாளர்களுக்குக் கிடைக்கும்.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ரெலிக்கொம் நிறுவனத்தின் வடபிராந்திய பிரதிப் பொது முகாமையாளர் விஸ்வநாதபிள்ளை யோகேந்திரன்.

மேற்படி பதவியை நேற்றுமுன்தினம் பொறுப்பேற்றுக்கொண்ட அவர், குடாநாட்டில் 'ரெலிக்கொம்' நிறுவனத்தின் சேவைகள் தொடர்பாக உதயனுக்கு விசேட செவ்வியை வழங்கினார்.

☆ *கேள்வி:* குடாநாட்டில் புதிய இணைப்புகளை வழங்குவதற்கு எத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன?

★ *பதில்:* சுன்னாகம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் இரண்டாயிரத்து 400 புதிய இணைப்புக்களை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

240 மில்லியன் ரூபா செலவில் அதற்கான வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

சுமார் 9 மாதங்களில் இந்த வேலைத்திட்டங்கள் நிறைவடையும். அதன்பின்னர் இணைப்புப் பெட்டிகள் பொருத்தப்பட்டு சுன்னாகம், மருதனார்மடம், உடுவில், மல்லாகம் போன்ற பகுதிகளுக்குப் புதிய இணைப்புகள் வழங்கப்படும்.

ஏனைய பகுதிகளுக்கும் பகுதி பகுதியாகப் புதிய இணைப்புகள் வழங்கப்படும்.

☆ *கேள்வி:* இணைப்புக்கள் சீரில்லை என்ற முறைப்பாடுகள் கிடைத்தவண்ணம் உள்ளன அதனைப் பற்றி என்ன கூறுகிறீர்கள்?

★ *பதில்:* ஆரம்பத்தில் வடமாகாணத்தில் நிச்சயமற்ற சூழ்நிலை நிலவியது. அதனால் புதிய பரிவர்த்தனை நிலையத்தை இங்கு கொண்டு வந்துபோட முடியவில்லை. இன்னோர் இடத்திலிருந்த பழைய பரிவர்த்தனை நிலையத்தை எடுத்துக்கொண்டு வந்துதான் இங்கு போடப்பட்டுள்ளது.

இங்கு மீண்டும் கலவரங்கள் இடம்பெறக் கூடிய நிலைமைகள் இருந்ததால், அத்தகைய சந்தர்ப்பத்தில் ரெலிக்கொம் நிறுவனத்துக்கு இழப்புக் குறைவாக இருக்கும் என்ற காரணத்தினால் பழைய பரிவர்த்தனை நிலையம் கொண்டு வந்து போடப்பட்டது. சில சந்தர்ப்பங்களில் இணைப்புக்களைச் சீராகப் பெறமுடியாமல் இருந்ததற்கு இதுதான் காரணம். ஆனால், ஓரளவுக்கு நிலைமை சீரடைந்திருப்பதால் அதனை மிகவிரைவாக அகற்றிவிட்டு புதிய ஒரு பரிவர்த்தனை நிலையத்தை அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



ரெலிக்கொம் நிறுவனம் யாழ்ப்பாணப் பரிவர்த்தனை நிலையத்தில் கூடுதலான பணத்தை முதலீடு செய்வதற்கு நிச்சயமற்ற நாட்டு நிலைமையே தடையாக இருந்தது.

அந்த நிச்சயமற்ற தன்மை நீங்கினால் மிக நவீனமான பரிவர்த்தனை நிலையம் இங்கு நிறுவப்படும்.

அதிலிருந்து மிகவும் சிறப்பான சேவைகளை மக்களுக்கு வழங்கமுடியும். அதன் பிறகு இணைப்புக்களில் சீரற்ற தன்மைகள் இருக்காது. ஒழுங்கான - சிறப்பான - தொலைபேசிச் சேவையினை யாழ்.மக்கள் பெறமுடியும்.

இப்போது அதற்கான சூழல் கனிந்து வருகின்றது என்றே நான் கருதுகின்றேன்.

☆ *கேள்வி:* யாழ்ப்பாணத்தில் தொலைபேசிச் சேவை வழங்கப்படாத இடங்களுக்குப் இணைப்புக்களை வழங்குவதற்குத் திட்டமிட்டுள்ளீர்களா?

★ *பதில்:* தொலைபேசி இணைப்பு வழங்குவது என்பது மின்சாரம் வழங்குவதுபோல் அல்ல. மின்சாரசபை மின்சாரம் கொடுப்பதென்றால் ஒரு தெருவில் மின்கம்பிகள் இருந்தால் அதன் மூலம் பல வீடுகளுக்கு மின்சாரம் வழங்க முடியும். எத்தனை பேருக்கும் கொடுக்கலாம்.

ஆனால், தொலைபேசி இணைப்புக்களை அதுபோலக் கொடுக்கமுடியாது.

தொலைபேசி இணைப்புக் கொடுப்பதென்றால் ஒவ்வோர் இணைப்புக்கும் பரிவர்த்தனை நிலையத்திலிருந்து இரண்டு வயர்கள் பொருத்தப்படவேண்டும்.

அந்த வயர்கள் வராததால் சில இடங்களில் இணைப்புக்களை வழங்கமுடியாத நிலை இருந்து வந்தது. இப்பொழுதும் அந்தப் பிரச்சினை இருக்கிறது. அந்த வயர்களையும் போதியளவு இங்கு எடுத்துவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

அப்படியான இடங்களுக்குப் பாவனையாளர்களின் காத்திருக்கும் பட்டியலின் அடிப்படையில் எங்கு எங்கு முதலில் வழங்கவேண்டுமென்று மதிப்பீடு செய்து, அதற்கு அமைய அந்தந்த இடங்களில் இணைப்புப் பெட்டிகளை வைத்து ஒவ்வோர் இணைப்புப் பெட்டியிலிருந்தும் பத்து இணைப்புகள் வீதம் வழங்கமுடியும்.

அப்படியான புதிய புதிய பெட்டிகளை எங்கு அமைக்கலாம் என்று திட்டமிட்டு வருகிறோம். இது தொடர்ச்சியாக நடைபெறும்.

☆ *கேள்வி:* இப்போது இணைப்புக்காக விண்ணப்பித்துவிட்டுக் காத்திருப்பவர்கள் எத்தனை பேர், அவர்களுக்கான இணைப்புக்கள் எப்போது சாத்தியமாகும்?

★ *பதில்:* மூவாயிரம் விண்ணப்பங்களுக்கு மேல் இப்போது இணைப்பு வழங்கப்படாமல் உள்ளது.

2002, 2003 ஆம் ஆண்டுகளில் விண்ணப்பித்தவர்களும்கூட இதில் அடங்குகின்றனர்.

ஆனால், 2004, 2005 ஆம் ஆண்டுகளில் விண்ணப்பித்தவர்களில் சிலருக்கு இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. இப்பொழுதும் இணைப்பு வழங்கப்பட்டு வருகின்றது.

திணைக்களங்கள், திணைக்களத் தலைவர்கள், வியாபார நோக்கங்கொண்டவர்கள் என்போருக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகின்றது.

☆ *கேள்வி:* வன்னிப் பிரதேசத்துக்கான தொலைபேசிச் சேவைக்காக எவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன?

★ *பதில்:* கிளிநொச்சியில் 500 இணைப்புக்களைக் கொண்ட ஒரு சிறிய பரிவர்த்தனை நிலையம் உள்ளது.

யாழ்ப்பாணம் பரிவர்த்தனை நிலையத்துடன் அது இணக்கப்பட்டுள்ளது.

500 இணைப்புக்கள் ஏற்கனவே வழங்கப்பட்டுவிட்டன.

தற்போது முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 30 இணைப்புக்களைக் கொடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

500 இணைப்புக்களைவிட மேலதிகமாக வழங்குவது என்றால் அங்குள்ள 500 இணைப்புக்களைக் கொண்ட ஒரு பரிவர்த்தனை நிலையத்தை வேறு ஒரு பெரிய பரிவர்த்தனை நிலையத்தினால் பிரதியீடு செய்யவேண்டும்.

அதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நாட்டின் நிச்சயமற்ற தன்மை இல்லாது போய்விட்டது என்றால் அங்கும் இரண்டாயிரம், மூவாயிரம் இணைப்புக்கள் கொண்ட பரிவர்த் தனை நிலையத்தை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அதனைத் தொடர்ந்து சாவகச்சேரி, கொடிகாமம், சித்தன்கேணி ஆகிய இடங்களில் ஒரு பரிவர்த்தனை நிலையம் வருவதற்குச் சாத்தியக்கூறுகள் உள்ளன.

☆ *கேள்வி:* கட்டணச்சீட்டை அனுப்புவதில் சில தவறுகள் இடம்பெற்றன என்று கூறப்படுகின்றதே...?

★ *பதில்:* அதிலே சில தவறுகள் நடந்துள்ளன தான். கடந்த 5 மாதங்களாக 'ரெலிக்கொம்' நிறுவனத்தில் புதிதாக மென்பொருள் ஒன்றை அறிமுகம் செய்தார்கள். அதுதான் பாவனையாளர்களின் சிட்டையைப் 'பிறிண்ட்' செய்வதற்குரிய மென்பொருள். அந்த மென்பொருளில் சிறு பிரச்சினை ஏற்பட்டதால் 4, 5 மாதங்களாகச் சிட்டை அனுப்பமுடியாத நிலைமை ஏற்பட்டது.

அதனால் 'ரெலிக்கொம்' நிறுவனத்துக்குப் பாரிய இழப்பும் ஏற்பட்டது. அது மூன்று மாத காலத்துக்குள் சீர்செய்யப்பட்டுவிட்டது. இப்பொழுது தொடர்ச்சியாக சிட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

☆ *கேள்வி:* மறுமுனையில் தொடர்புகொள்பவரின் இலக்கத்தை அறிந்துகொள்ளக்கூடிய வசதிகள் செய்யப்படுமா?

★ *பதில்:* ஒருவருக்குத் தொந்தரவு அழைப்பு வந்தால் எங்கிருந்து வந்தது என்று கண்டுகொள்ளும் வசதி யாழ்ப்பாணத்தில் இல்லை.

இங்கு இருப்பது ஒரு பழைய பரிவர்த்தனை நிலையம். 80 ஆம், 82 ஆம் ஆண்டுகளில் தருவிக்கப்பட்ட பரிவர்த்தனை நிலையம்தான் இது.

மிக நவீன பரிவர்த்தனை நிலையம் இங்கு வரும் என்றால் அந்தக் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படும்.

மறுமுனை இலக்கத்தை அறிந்துகொள்வதற்குரிய வசதிகள் யாழ்ப்பாணத்தில் இல்லாததால்தான் பலருக்குத் தொந்தரவு அழைப்புகள், அநாமதேய அழைப்புகள் என்பன வருகின்றன.

அது தொடர்பான முறைப்பாடுகளும் ஏராளமாகக் கிடைத்திருக்கின்றன. அதற்கு எம்மால் ஒன்றும் செய்யமுடியாமல் உள்ளது.

ஆனால், கொழும்பு போன்ற பகுதிகளில் அந்த வசதிகள் உள்ளன. அதேபோல இங்கும் மறுமுனை இலக்கத்தை அறிந்துகொள்ளக் கூடிய வசதிகள் (சீ.எல்.ஏ.) விரைவில் செய்யப்படும் - என்றார் வி.யோகேந்திரன்.

(த-7)

## தவறி வீழ்ந்து விட்டது



புல் வெட்டும் இயந்திரத்தின் முக்கிய உதிரிப்பாகம் ஒன்று (படத்தில் உள்ளது) - ஆடுதண்டு (றொட்) - முல்லைத்தீவு, பரந்தன் நெடுஞ்சாலையில் தேராவிலுக்கும் பரந்தன் சாலைக்குமிடையில் தவறிவீழ்ந்து காணாமற்போய்விட்டது.

இதனைக் கண்டெடுத்தவர்கள் விசுவமடு தேராவில் பண்ணையிலோ அன்றி கிளிநொச்சியிலுள்ள வன்னி வேளாண் தொழில்நுட்ப நிறுவனத்திலோ ஒப்படைத்துதவுமாறு அன்பாக வேண்டுகின்றோம்.

தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**- உதிரிப்பாக உரிமையாளர்.**

(சி-42363)(26-14)

## நீங்கா நினைவில் ஓராண்டு



அமரர்

**முத்துலிங்கம் தங்கராசன்**

(இளைப்பாறிய ஆசிரியர், யா/ இந்து ஆரம்ப பாடசாலை)

**மண்ணில் 22.03.1922** திதி : தசமி (18.04.2005) **விண்ணில் 29.04.2004**

எமது அன்புத் தெய்வம் மறைந்து
ஆண்டொன்று சென்றாலும்
இன்னும் ஆறவில்லையே எம்துயரம் !
என்றும் உங்கள் நினைவுடனேயே
நாம் இங்கு வாழ்கின்றோம் !

(C-44366)(51-14)

பிரம்படி ஒழுங்கை,
கொக்குவில்.

உங்கள் பிரிவால்
துயருறும் மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## தமிழர் ஆசிரியர் சங்க நல்லூர் கிளைத் தெரிவு

நல்லூர்,ஏப்.18

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் நல்லூர்க் கோட்டக் கிளையின் புதிய நிர்வாக உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவாகினர்.

தலைவர் கு.மகாலிங்கமும் செயலாளராக தெ.ஸ்ரீதரனும் துணைத் தலைவர் இ.அருணாசலமும் துணைச் செயலாளராக க.சகுந்தலா தேவி, ஏ.அன்பழகன் ஆகியோரும் நிதிச் செயலாளராக திருமதி க.தவமணியும் தெரிவாகினர்.

தெரிவுசெய்யப்பட்ட பத்து உறுப்பினர்களும் பதவிநிலை வழி உறுப்பினர்கள் ஐந்து பேருமாக பதினைந்து நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவானார்கள். (த-111)

## நவாலி வடக்கில் நாய்கள் தொல்லை

யாழ்ப்பாணம்,ஏப்.18

நவாலி வடக்கு நாச்சிமார் வீதியில் நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வீதியிலுள்ள வளர்ப்பு நாய் ஒன்று அண்மையில் 7 பேரைக் கடித்த சம்பவம் தொடர்பாக வலி.தென்மேற்குப் பிரதேச சபைத் திட்டமிடல் பிரிவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

(த-185-204)

## அவசர கலந்துரையாடல்

**இன்று (18.04.2005) திங்கட்கிழமை பி.ப. 2.00 மணக்குத் தனியார் சிற்றூர்திச் சேவைச் சங்கத்தன் தென்மராட்சிக் காரியாலயத்தில் அவசர கலந்துரையாடல் ஒன்று இடம்பெறுகின்றது. இந்தக் கலந்துரையாடலில் தென்மராட்சி சிற்றூர்தி சேவைச் சங்கத்தின் உரிமையாளர்கள், ஊழியர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

(44375) **- நிர்வாகம்.**

## கண்ணீர்க் காணிக்கை



வடபிராந்திய
போக்குவரத்துச் சபையின்
திடீர் பரிசோதனைக்குழு
அதிகாரியான

அமரர்

**வீரகத்தி குலானந்தன்**

அவர்கள் 16-04-2005 அன்று
காலமாகி விட்டார்.
அன்னாரின் மறைவுக்குக்
கண்ணீர்க் காணிக்கையைச்
செலுத்துகின்றோம்.

குலானந்தன் பெயர் படைத்த குணநேயா
குறுகிய காலத்தில் எமைவிட்டுச் சென்றாயோ?
பண்புடன் பழகிய ஐயா! பாசத்துடன் பிரிந்தாயோ?
எல்லோருக்கும் உதவிசெய்த உத்தமரே!
எங்கு காண்போம் இனி? அழுகின்றோம் - தொழுகின்றோம்
ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

**பொதுமுகாமையாளர்**
(கோண்டாவில்),
**வட்டாரக் கணக்காளர் காரியாலயத்தினரும்**
**கணக்காய்வாளர் காரியாலயத்தினரும்.**

வடபிராந்திய போ.ச.,
வவுனியா.
(44372)(26-14)

# மின்சாரசபை தொழிற்சங்கங்களுடன் அரசு இன்று நடத்தவிருந்த பேச்சு ரத்து

கொழும்பு,ஏப்.18

இலங்கை மின்சாரசபை மறுசீரமைப்புத் தொடர்பில் அரசுக்கும் மின்சாரசபை தொழிற் சங்கங்களுக்கும் இடையே இன்று திறைசேரி யில் நடைபெறவிருந்த பேச்சு திடீரென ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

பேச்சு ரத்துச்செய்யப்பட்டமை குறித்து நேற் றுத் தொழிற்சங்கங்களுக்கு அறிவிக்கப்பட்ட போதும் அதற்கான காரணம் என்ன என்பது குறித்துத் தெரிவிக்கப்படவில்லை.

மின்சாரசபை தொழிற்சங்கங்களுடனான இன்றைய பேச்சில் அமைச்சர்களான சரத் அமுனுகம, சுசில் பிரேமஜயந்த, திறைசேரியின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர ஆகியோர் கலந்து கொள்ளவிருந்தனர்.

இன்றைய பேச்சு ரத்துச்செய்யப்பட்டாலும் பிறிதொரு தினத்தில் இந்தப் பேச்சுக்கள் நடத் தப்படுமென நேற்று மாலை கருத்து வெளி யிட்ட மின்சக்தி எரிபொருள் துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

"பேச்சுக்களில் கலந்துகொள்பவர்கள் பலர் விடுமுறையில் இருக்கின்றனர். அவர்கள் திரும்பி யவுடன் பேச்சு நடத்தப்படும் " - என்றும் அவர் தெரிவித்தார். (க)

# தமிழர் ஆசிரியர் சங்கத்துக்கு பதில் பொதுச் செயலர் நியமனம்

காரைதீவு,ஏப்.18

வெளிநாடு சென்றுள்ளவரான இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம் நாடு திரும்பும் வரை சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் நாயகம் த.பஞ்சலிங்கம் பதில் கடமையாற்றுவார். சர்வ தேச கல்வியகத்தின் பொதுச்செயலாளர் பிரட் வன் லியூவனுக்கு பொதுச் செயலாளர் த.மகா சிவம் எழுதியுள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஜெனீவாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும மனித உரிமைகள் தொடர்பான மாநாட்டில் கலந்துகொள்ள த.மகாசிவம் அங்கு சென்றுள் ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - சர்வதேச கல்வியகத்தின் சுனாமி நிவாரணத் திட்டத்திற்குத் தமிழர் ஆசிரியர் சங்கம் சார்பாக மாவட்ட ரீதியில் நியமிக்கப்பட்டவர்களின் பெயர்கள் அறிவிக் கப்பட்டுள்ளன.

அவர்களின் பெயர் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் வருமாறு-

மட்டக்களப்பு - நிதிச்செயலாளர் எஸ்.தர்ம ராஜன் (065 2225218), அம்பாறை - பிரசாரச் செயலாளர் விரி.சகாதேவராஜா (067 2220006), திருகோணமலை கல்விச் செயலாளர் என்.ராஜ நாதன் (026 2221223), முல்லைத்தீவு மற்றும் வவுனியா செயலாளர் எஸ்.உதயகுமார் (024 - 2221555), யாழ்ப்பாணம் சிரேஷ்ட உதவிப் பொதுச்செயலாளர் த.பஞ்சலிங்கம் (021 222 6524).

சுனாமியில் உயிரிழந்த ஆசிரியர்களின் பின் னுரித்தாளர்கள், பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் ஆகியோர் மேற்குறிப்பிட்டவர்களுடன் தொடர்பு கொண்டு நஷ்டஈட்டைப் பெறுமாறு சுனாமித் திட்டப் பொருளாளர் தி.கணேசராஜா அறிவித் துள்ளார். (ஒ-84)

# புதிய ஜனநாயகக் கட்சியின் சார்பில் மேதின ஊர்வலம்

யாழ்ப்பாணத்தில் மேதின நிகழ்வைப் புதிய ஜனநாயகக் கட்சியின் வடபிரதேசக் குழு நடத் தவுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக கட்சியின் செயலா ளர் கா.கதிர்காமநாதன் வெளியிட்டுள்ள செய் திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யுத்தத்தினாலும் சுனாமி அனர்த்தத்தினா லும் ஏற்பட்ட பேரழிவுகளால் பாதிப்படைந்த மக்களின் அவலங்களையும் தொழிலாளர்கள் இன்றைய சூழலில் எதிர்நோக்கும் அன்றாடப் பிரச்சினைகளையும் வெளிக்கொணர்ந்து அவற் றிற்கான தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளும் வழி களை வற்புறுத்தும் வகையில் மேதின ஆர்ப் பாட்ட ஊர்வலம் நடத்தப்படவுள்ளது. ஊர்வ லத்தின் முடிவில் கூட்டமும் நடைபெறும்.

இத்தகைய பேரணிகள் மலையகம், கொழும்பு ஆகிய பிர தேசங்களிலும் நடத்து வதற்கு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள் ளன - என்று அதில் உள்ளது. (ஒ)

## அரச ஆய்வுகூடத்தில் மரபணுச் சோதனை

பொறளையிலுள்ள அரச மருத்துவ ஆய்வு கூடத்தில் மரபணு ஆய்வுத் தொழில்நுட்ப முறையை அறிமுகப்படுத்த சுகாதார அமைச் சர் நிமல் சிறிபால டி சில்வா முன்வந்துள்ளார்.

சுகாதார சேவையின் பிரதி இயக்குநர் நாயகம் வைத்திய கலாநிதி அத்துல ஹகந்த லியனகே இதுபற்றி தெரிவித்ததாவது:-

அரசுக்குச் சொந்தமான மருத்துவ ஆய்வு கூடத்தில் நவீன மரபணு ஆய்வுத் தொழில்நுட்ப முறை அறிமுகப்படுத்தப்படுவது இதுவே முதன் முறையாகும். இதுவரை காலமும் இச்சேவையை சுகாதாரத் திணைக்களம் தனியார் ஆய்வு கூடம் ஒன்றிடமிருந்தே பெற்றுவந்தது -என் றார். (ஒ-12)


A/L -2005 வழிகாட்டல் கருத்தரங்கு
பொதுச் சாதாரணப் பரீட்சை
செவ். -> வியாழன் 8.00 -10.00
★ D.M.I. யாழ்நகரில் நடைபெறும். சகல துறை மாணவரும் பங்குபற்றலாம். (44382)(29-11-34)

SUBRA (14) சித்தன்கேணி
A/L -2005
வழிகாட்டல் கருத்தரங்கு
பொதுச் சாதாரணப் பரீட்சை
புதன் -> வெள்ளி
காலை 10.00 - 12:00 மணி
★ வேறு நிலைய மாணவர்களும் பங்குபற்றலாம்.
(சி-42367)(29-11-34)

SUBRA (14) சித்தன்கேணி
மாகாணப் பொதுச்சேவை
போட்டிப் பரீட்சை வகுப்புகள்
ஆரம்பம்:
19.04.2005 (செவ்வாய்)
மாலை 6.00 - 8.00 மணிவரை
ஆசிரியர்:
த.தவசேகர் (B.Sc., P.G.D.E.)
(சி-42366)(29-11-34)


## வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனம்

## மணல் விநியோக அறிவித்தல்

அன்னை பூபதி தினத்தை முன்னிட்டு 19.04.2005 செவ் வாய்க்கிழமை மணல் விநியோகம் நடைபெறமாட்டாது. செவ் வாய்க்கிழமை குறிப்பிட்டவர்களுக்கும் 19.04.2005 திகதி குறிப்பிட்டவர்களுக்குமான மணல் விநியோகம் இன்று (18.04.2005) திங்கட்கிழமையும் 20.04.2005 புதன்கிழமை யும் நடைபெறும். பொருத்தமான ஒரு திகதியில் மணலைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

மணல் விநியோகப் பகுதி
உபய கதிர்காமம். (சி-42365)(29-11-17) - நிர்வாகம்.

## தவறிவிட்டது

17/1, சபாவதி வீதி, பூநாறி மரத்தடி, கொக்குவிலைச் சேர்ந்த சண்முகநாதன் அருட் செல்வன் என்பவருடைய தே.அ.அ.இல. (853611956V), விசேட அடையாள அட்டை என் பவற்றுடன் கூடிய பேர்ஸ் கொக்குவில் சந்திக் கும் நாச்சிமார் கோவிலடிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேல் காணும் முகவரியில் ஒப்படைத்து உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (44378)(29-11-17)


வெளிவந்துவிட்டன!
2005 புதிய பாடத்திட்டத்துக்குரிய
◇ குடியுரிமைக் கல்வி - தரம் 7 -
ஆக்கம்: செல்வி மனோகரி முத்துலிங்கம் (B.A. Hons)
- அரசறிவியல் ஆசிரியை -
◇ வரலாறு - தரம் 7-
ஆக்கம்: ம.சிவரூபன் (B.A. Hons)
◇ புவியியல் - தரம் 7-
ஆக்கம்: செல்வி ராதா அம்பலவாணர் (B.A., Dip. in Edu.)
வெளியீடு: ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை
235, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(சி-42364)(29-11-17)

BARATHY
சித்தன்கேணி
யாழ்.நகரின் பிரபல்யமிக்க ஆசிரியர்கள் சித்தன்கேணியில் ஒரே ஒரு நிறுவனத்தில் மட்டும்தான் கற்பிக்கின்றார்கள். எது என்பதை நீங்கள் அறிந்தீர்களா?
A/L 2007
புதிய வகுப்புகள் நடைபெறுகின்றன.
யாழ்.ஆசிரியர் குழுவினால்
பொருளியல் - மகேந்திரன்
கணக்கீடு - முகுந்தன்
வணிகக்கல்வி - பகீல்
அளவையியல் - R.P. சர்மா
தமிழ் - பாலா
இந்துநாகரிகம் - சுரேஸ்
இந்து சமயம் - தரன்
புவியியல் - குமரன்
அரசியல் - றஜீவன்
கிறிஸ்தவம் - வசந்தன்
நாட. அரங்கியல் - சுதன்
வரலாறு - பத்மன்
ஆங்கிலம் - நிஷாந்தன்
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
(44376)(29-11-17)

BARATHY
சித்தன்கேணி
கடந்தகால பெறுபேறுகளே எமது ஆசிரியர்களின் திறமைகளை மேலும் உறுதிசெய்கின்றன.
O/L DAY CLASS
புதிய பிரிவுகள் நடைபெறுகின்றன.
திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி
காலை - 8 மணி முதல் 12 மணி வரை
எமது தனித்துவமும் அதிதிறமையும் கொண்ட ஆசிரியர் குழுவினால்
விஞ்ஞானம் - தேவா
கணிதம் - எஸ்.சிவரூபன்
தமிழ் - குகபரன்
- தமிழ்மாறன்
சமூகக்கல்வி - சுதன்
ஆங்கிலம் - விஜயபாஸ்கர்
- திலகர்
சமயம் - தரன்
வர்த்தகம் - லோகேஸ்வரன்
குறிப்பு:- 90 மாணவர்களுக்கு மட்டும்தான் அனுமதிகள் வழங்கப்படும்.
★ நாளுக்குநாள் மாணவர்களின் தொகை அதிகரிப்பதனால் மிக விரைவில் அனுமதிகள் நிறுத்தப் படவுள்ளன.
(44376)(29-11-17)

நாதன்ஸ் சினிமா
தாவடிமைந்தன் ஜெய்ஆகாஷ், பிரணதி, நாசர், தாமு, வையாபுரி நடித்த

குருதேவா
காதல் பாதி
கா.நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பி.நே)

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்
ரஜனி, நயன்தாரா, பிரபு, ஜோதிகா, வடிவேல் நடித்த

சந்திரமுகி
காட்சிகள 11.00. 3.0 7.00 (பி.நே)
விசேட காட்சிகள: 10.00. 1.00. (பி.நே.)

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு கமலஹாசன், மனீஷா கொய்ராலா, நாசர் நடித்த

மும்பை X பிரஸ்
காட்சி நேரம்: 10.30,2.30, 6.30, 9.30 (பி.நே)
ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

மனோகரா யாழ்ப்பாணம்
விஜய், ஹரினி, வடிவேல் நடித்த

சச்சின்
காட்சி நேரம்:
10.30 a.m., 2.30.p.m.,6.30p.m.,9.30 p.m.

நிரஞ்சனாஸ் சங்கானை
இன்று முதல் பிரசன்னா, அனு, வடிவேல் நடித்த
காதல் டாட் கொம்
கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பி.நே)
விரைவில் ஜெய்ஆகாஷ் நடித்த செவ்வேள்


# மரண அறிவித்தல்கள்

## கந்தசாமி குலநாதன் (குலம்)

நீராவியடியைப் பிறப்பிடமாகவும் கல்வியங்காட்டை வதிவிடமாக வும் கொண்ட கந்தசாமி குலநாதன் (குலம்) அவர்கள் நேற்று (17.04.2005) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி திலகவதியின் அன்பு மகனும் அருள்சீலியின் கணவரும் ராகுலன், துஷந்தினி, யகிலன் ஆகியோ ரின் தந்தையும் ஸ்ரீகாந்தனின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.04.2005) திங்கட் கிழமை மாலை 5 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்

*18/1, பூதவராயர் வீதி, திருநெல்வேலி.* (44383)(29-11-34)

தகவல்: அருள்சீலி (மனைவி).

## செல்லத்துரை சிவலிங்கம்



கொக்குவில் மேற்கு, காளிகோயிலடியைப் பிறப்பிடமாகவும் சங்கி லியன் வீதி, நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை சிவலிங்கம் அவர்கள் 16.04.2005 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - துரையம்மா தம்பதியின் அன்பு மகனும் கந் தையா - தங்கராணி தம்பதியின் அன்பு மரு மகனும் நந்தினியின் பாசமிகு கணவரும் தசோ பன், சமிதா ஆகியோரின் அன்புத் தந்தையும் யோகராசா, கதிரமலை, கணேசலிங்கம், சுந்தர லிங்கம், சிவகுமார், தவயோகம், லீலாவதி, செல்வராணி, ஜெயராணி, பத்மராணி, ரோகினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் கெங்காதரன், லிங்கேஸ்வரன், லோகேஸ்வரன், சசிகலா, மகேஸ்வரன், ஜானகி, திருக்கேதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.04.2005) திங்கட் கிழமை சங்கிலியன் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம் மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்

*சங்கிலியன் வீதி, நல்லூர்.* (44379)(29-11-17)

தகவல்: புஸ்பகரன் (மருமகன்).

## வைரமுத்து தர்மலிங்கம்



வேலணை மேற்கைச் சேர்ந்த வைரமுத்து தர்மலிங்கம் நேற்று (17.04.2005) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து- கனகம்மா அவர்களின் மகனும், நாகரத் தினத்தின் அன்புக் கணவரும் காலஞ் சென்ற அன்னம்மா, காலஞ்சென்ற கந் தையா, காலஞ்சென்ற நாகலிங்கம், பொன் னையா ஆகியோரின் சகோதரனும், இரா ஜேஸ்வரி, மகாலெட்சுமி, விக்கினேஸ்வரன், சிவனேஸ்வரன், விக்னேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும் கணேச மூர்த்தி, ராதிகா, அன்னராணி, இளம்பூரணன் ஆகியோரின் அன்பு மாமனாரும். அனித்தா, சயிந்தன், சஞ்சீவன், அனோ யன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.04.2005) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 3 மணிக்கு வேலணை, அம்பலவி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: சிவா (மகன்- சிற்பனை முருகன் தொலைத்தொடர்பு நிலையம்).

*வேலணை மேற்கு, வேலணை.* (44377)(56-29-11-17)



தியாகி அன்னை பூபதியின் நினைவுதினம் புலம்பெயர்ந்த தமிழர்களாலும் எழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் சுவிஸில் அன்னை பூபதியின் நினைவு தினம் அண்மையில் அனுஷ்டிக்கப்பட்டது.

அந்நிகழ்வில் 'புலிகளின் குரல்' பொறுப்பாளர் தமிழன்பன் ஈகச்சுடரேற்றி அஞ்சலி செலுத்துவதையும் பொதுமக்கள் மலரஞ்சலி செலுத்துவதையும் படங்களில் காணலாம்.

## லண்டனிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சகரொருவர் நேற்றுத் தெரிவித்தார்.

இதன் பிரகாரம் ஜனாதிபதி நாடு திரும்பியவுடன் ஜே.வி.பி., இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, தேசிய ஐக்கிய முன்னணி, ஈ.பி.டி.பி. ஆகிய கட்சிகளுடன் பேச்சுக்களை நடத்துவார். பொதுக்கட்டமைப்பு தொடர்பிலான அரசின் நிலைப்பாட்டை மேலும் உறுதிப்படுத்திக்கொள்வாரென அவர் மேலும் குறிப்பிட்டார்.

அதேசமயம், பொதுக்கட்டமைப்புத் தொடர்பில் எதிர்க்கட்சிகளான ஐக்கிய தேசியக்கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகளுடனும் ஜனாதிபதி தனித்தனியாகப் பேச்சுகளை நடத்துவாரெனத் தெரிவிக்கப்படுகிறது.

## பயங்கரவாதத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழுவினரிடம் ஒப்படைக்கப்படவேண்டும் என்றும் -

செஞ்சிலுவைக் குழுவினர் பாதுகாப்புக் கருதி ஜெயசீலனை யாழில் உள்ள அவரின் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கவேண்டும் என்றும் - மேல்நீதிமன்று உத்தரவு பிறப்பித்தது எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜெயசீலனின் சார்பில், கொழும்பில் உள்ள மனித உரிமைகளுக்கான இல்லத்தைச் சேர்ந்த சட்டத்தரணி பூபாலன் ஆஜராகியிருந்தார். (க)

## எரிக் சொல்ஹெய்ம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கில் முஸ்லிம்கள் வாழ்ந்த நிலங்கள், வீடுகள் மற்றும் சொத்துக்கள் போன்றவற்றை அவர்களுக்குப் பெற்றுக் கொடுக்க அரசுடனும் புலிகளுடனும் பேச்சுக்கள் நடத்தப்படும். அவ் வாறே அவர்களை மீளக்குடியமர்த்தி அவர்கள் பாதுகாப்புடன் வாழ்வதற்கான சூழலையும் நோர்வே ஏற்படுத்தும்.

சமாதானப் பேச்சில் முஸ்லிம்களுக்கு உரிய தீர்வைப் பெற்றுக் கொடுக்காதவரை அச்சமாதானத்தை முழுமையாக அனுபவிக்க முடியாது - என்றார். (க)

## அன்னை பூபதியின் நினைவு தினத்தை எழுச்சியுடன் அனுஷ்டிக்க ஏற்பாடு

கிளிநொச்சி,ஏப்.18

தியாகி அன்னைபூபதியின் 17 ஆம் ஆண்டு நினைவு நாளின் இறுதிநாள் நிகழ்வுகளை உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கும் வகையில் ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

இதற்கான நடவடிக்கையை விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினருடன் இணைந்து, மாவட்ட, பிரதேச, கிராம பொது அமைப்பினரும் பொது மக்களும் மேற்கொண்டுள்ளனர்.

தியாகி அன்னைபூபதி, இந்திய அரசிடம் இரண்டு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து மட் டக்களப்பு மாமாங்கேஸ்வர ஆலய முன்றிலில் உண்ணாவிரதப் போரை ஆரம்பித்தார். அவரது அஹிம்சைப் போரை இந்திய அரசு உதாசீனப்படுத்திய நிலையில் 19.04.1988 அன்று அன்னை பூபதி வீரச்சாவடைந்தார்.

அன்னை பூபதியின் 17 ஆம் ஆண்டு நினைவுதின இறுதிநாள் நிகழ்வுகள் நேற்று ஆரம்பமாகித் தொடர்ந்து இன்றும் நாளையும் நடைபெறவுள்ளன.

இதனையொட்டி பல நினைவு நிகழ்வுகள் இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

திருமுறிகண்டிப் பகுதியில் தேசிய எழுச்சிப் பேரவை, வர்த்தக சங்கம் என்பன இணைந்து அன்னைபூபதி நினைவு நிகழ்வை நேற்று நிகழ்த்தின.

இந்நிகழ்வில் அடையாள உண்ணாவிரதம் மாணவர்களின் கலை நிகழ்வுகள் என்பன இடம்பெற்றன. பெரும் எண்ணிக்கையான மக்கள் இதில் கலந்துகொண்டனர்.

முல்லைத்தீவில் அமைந்துள்ள மட்டக்களப்பு - அம்பாறை மாவீரர் மண்டபத்தில் அங்குள்ள மக்கள் அன்னை பூபதி நினைவு நிகழ்வுகளை அனுஷ்டித்தனர்.

ஜெயபுரம் மகா வித்தியாலயத்திலும் அன்னை பூபதி நினைவு நிகழ்வுகள் வட்டக்கச்சிப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் தலைமையில் இடம்பெற்றுள்ளது. (ஓ-12)

## இந்தியாவிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவர் வெலிகமையைச் சேர்ந்த முஸ்லிம் நபராவார். இவர் வெளிநாடு ஒன்றுக்கு அனுப்புவதாகக்கூறிய முகவர் ஒருவரினால் ஏமாற்றப்பட்டு 3வருடங்களுக்கு முன் இந்தியா வுக்கு கூட்டிச்செல்லப்பட்டார் என நீதிமன்ற விசாரணையின்போது தெரிவித்துள்ளார். கடைசி நபர் களனியைச் சேர்ந்த சிங்கள நபராவார். இவரும் வெளிநாடு ஒன்றுக்குச் செல் வதற்காகவே முகவர் ஒருவரினால் இந்தியாவுக்கு அழைத்துச்செல்லப்பட்டவர் என்று நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆறு பேரையும் இம்மாதம் 29ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் மாவட்டப் பதில் நீதிவான் எம்.ஐ. பாரூக் பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

மேற்குறிப்பிட்ட 14பேரும் தலா 2,500 ரூபா முதல் 3,000 ரூபா வரை பயணக்கட்டணமாகச் செலுத்தியே இலங்கைக்கு வந்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## வீதிகளை அகலப்படுத்த மக்கள் ஒத்துழைப்புத் தேவை

சாவகச்சேரி,ஏப்.18

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வீதிகளை செப்பனிடும்பொழுது - அப்பகுதி மக்கள் இந்த வீதிகளை அகலமாக்க வசதியாக வீதியின் இருமருங்கும் காணிகளை விட்டுத்தர முன்வரவேண்டும்.

- இவ்வாறு சாவகச்சேரி பிரதேச சபைச் செயலாளர் கு.ந.பாலச்சந்திரன் கேட்டுள்ளார்.

சாவகச்சேரி பிரதேச சபை 49 கிராம சேவையாளர் பிரிவுகளைக் கொண்ட பரந்த நிலப்பரப்புடைய பிரதேச சபையாகும். இப்பகுதியில் கடந்த வருடம் பல வீதிகள் செப்பனிடப்பட்டுள்ளன. இவ்வருடமும் பல லட்சம் ரூபா செலவில் - 'நிக்கொட்' நிதியுதவியுடன் - ஆறு வீதிகள் செப்பனிடப்படுகின்றன. நிதிப் பிரச்சினை காரணமாக பல வீதிகள் செப்பனிடப்பட முடியாமல் உள்ளன. ஒரு கிலோமீற்றர் வீதியை செப்பனிட சுமார் 12 லட்சம் ரூபா தேவைப்படுகிறது. எனவே, இப்பிரதேச வீதிகள் படிப்படியாக செப்பனிடப்படும்

- இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (ஓ-31)

LOGIC
A/L 2006
பகுதி II
ஆரம்பம்: 19.04.2005
செவ். 4 p.m.
By:P.கமல்
N.S.A.
மானிப்பாய் வீதி, உடுவில்.
(44381)

தமிழ்
திரு.N.வேந்தன்
(B.A. (Hons) Tam. Spl.)
A/L 2006
பகுதி II
ஆரம்பம்: 19.04.2005
Tue. 5 p.m.
N.S.A.
மானிப்பாய் வீதி, உடுவில்.
(44390)

இதய அடைப்பு நோய் குணமாக வேண்டுமா?
இதய அடைப்பு நோய்க்காக வாழ்நாள் முழுவதும் சிகிச்சை பெறவேண்டியதில்லை, எங்களுடைய ஆயுர்வேத மருத்துவம் மூலம் அதனைச் சில வாரங்களில் குணமாக்கலாம். இதய அடைப்புத் தொடர்பான சிகிச்சைகளை நாங்கள் உரியமுறையில், குறைந்த செலவில் வழங்குகிறோம்.
விபரங்களுக்கு:
FAIR PHARMA (PVT) LTD
(MANUFACTURERS OF AYURVEDIC MEDICINES)
Level 5/ East Tower/1C, WORLD TRADE CENTER, COLOMBO - 01,
Phone: 5517897, 5551879, Fax: 5517756
E-mail: fppvtl@lankabellnet.com Website:www.fppvtl.org
A BOI Approved & ISo 9001 : 2000 Qms Cetified Company.
(சி-42357)(29-11-17)

தொழிற்பயிற்சி நெறிகள்
வெளிநாடுகளில் இலகுவான முறையில் வேலைவாய்ப்பைப் பெறக்கூடியவாறு 100% தொழில்சார் தொழிற்பயிற்சி அளிக்கப்படும். பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
* RADIO, T.V AND VIDEO DECK REPAIRING
சகல இன றேடியோ, ரீ.வி.,டெக் மற்றும் எலெக்ரோனிக் உபகரணங்கள், Computer Monitor, Ups, Printer, Scanner என்பன திருத்தும் முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 10 மாதங்கள்)
* MOTOR REWINDING AND ELECTRICAL WIRING
சகல இன, (f) பான், ரான்ஸ்போமர்கள் றிவைண்டிங் செய்யும் முறை மற்றும் வீட்டு மின்னிணைப்பு Single Phase, Three Phase இணைப்பு முறை என்பன பயிற்சி அளிக்கப்படும். (காலம் 07 மாதங்கள்)
* AIR CONDITIONING AND REFRIGERATION
சகல இன குளிர்சாதனப் பெட்டி மற்றும் எயர் கொண்டிசன் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 07 மாதங்கள்)
* MOTOR CYCLE MECHANISAM
சகல இன மோட்டார் சைக்கிள், நீரிறைக்கும் இயந்திரம் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 06 மாதங்கள்)
* AUTO WIRING (காலம் 03 மாதங்கள்)
ஆரம்பம்:-23,25.04.2005
மேலதிக விவரங்களுக்கு
JAFFNA TECHNICAL INSTITUTE
இல. 07, பலாலி வீதி யாழ்ப்பாணம்.
T.P:- 021-222 3335, 077 3151200
(சி-42350)(29-11-17)

வெளிவந்துவிட்டது
பட்டதாரிகளை அரச சேவைக்கு உள்ளீர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை வழிகாட்டி நூல்
★ பெருந்தொகையான வினாக்கள் விடைகளுடன்
By:P.கமல்தாசன் நண்ணறிவு
பூபாலசிங்கம், ஸ்ரீலங்கா, சிதம்பரப்பிள்ளை, துர்க்கா, சுப்பிரமணியம்.
★ சொற்ப பிரதிகளே
(44380)(29-11-17)

சமய சந்தர்ப்பங்கள் எப்போதும் கிட்டுவதில்லை
UNIT
விபரம் 8 ம் பக்கம் பார்க்கவும்

NEW SCIENCE CENTRE
யாழ். நகர்
A/L 2006 ORGANIC
ஆரம்பம்: 18.04.2005 Mon. 10 a.m.
INORGANIC - பிரிவு III
Mon., Wed. 3.00 - 4.00 p.m..
INORGANIC PAPER
Fri. 3.00 - 5.00 p.m.
★ A/L 2007 புதிய பிரிவு விரைவில் ஆரம்பம்.
★ A/L 2005 இறுதிய 18 ஆவது கருத்தரங்கு Tue. 8.30 நடைபெறும்.
By: அன்பழகன் B.Sc.

COMPUTER EXPRESS
Institute of Information Technology
இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
0777 222422 , 0773 151647
DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING
QUICK BOOKS PRO+ ACCPAC+MYOB
ஆரம்பம்:-23/04/2005,24/04/2005
Batch I :-10.30am
Batch II:-04.00pm
Batch III:-06.30pm
காலம்:- 04மாதம்
அலுவலர்களிற்கான மாலைநேர விசேட வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

உயர்தர ஆங்கிலக் கல்வியில் தனித்துவம் மிக்க நிறுவனம்
OXFORD ENGLISH ACADEMY
P.K.LANE POINT PEDRO
பலரின் வேண்டுகோளுக்கு இணங்க முதன் முறையாக இடை நிலைப்பிரிவுகள் (தரம் 6- 11 வரை) ஆரம்பம் 23.04.2005
* அதிக கவனம் செலுத்தும் பொருட்டு ஒவ்வொரு வகுப்புகளிலும் வரையறுக்கப்பட்ட மாணவர் தொகை-
* அடிப்படையில் இருந்து இலக்கணம், எழுத்துப் பயிற்சி, வாசிப்புப் பயிற்சி-
* பேச்சுப் பயிற்சிக்காகக் கூடிய நேரம்-
* மாதாந்தம் பரீட்சைகளும், கணிப்பீட்டு அறிக்கைகளும்-
* ENGLISH MEDIUM மூலம் கல்வி கற்கும் மாணவர்களுக்கான விசேட பிரிவு-
(அடிப்படை இலக்கணம், எழுத்து, கிரகித்தல், பேச்சுப்பயிற்சி)
* தரம் 11 மாணவர்களுக்கான விசேட ENGLISH model paper class
குறிப்பு:- அனுமதிகள் 23 ஆம் திகதி வரை மட்டுமே வழங்கப்படும்.
அனுமதிக்கு முந்துங்கள்!
மிக விரைவில் ஆரம்பப் பிரிவுகள் ஆரம்பமாகும்.
இயக்குநர்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.04.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.